மாலை 46 மணி 5 மே 2004 விலை ரூ.10

திருக்கோயில்

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை வெளியீடு

Creations in Weaves

Exclusivity of Kanjeevarams enhanced with rich embroidery.

Embroidery on Italian crepe, Tussar Silk, Kora cotton also

available at 2nd level of Kumaran Silks.

Kumaran Silks

Weaving dreams since 1955

One address. Only one Kumaran Silks.

12, Nageswaran Road (opp. Panagal Park) T.Nagar, Chennai 17.

Tel: 24343544,3727,3757. www.kumaransilks.net

திருக்கோயில்
திருவள்ளுவர் ஆண்டு 2035 தாரண - வைகாசி
மாலை-46 மணி-5 மே 2004

அன்பார்ந்த வாசகப் பெருமக்களே!

வணக்கம்.

சிறப்புமிக்க - மனித வாழ்க்கை மேம்பாட்டிற்கு இன்றியமையாத ஞானக் கல்வியை ஞால மக்களுக்கு வழங்கி அவர்களை "வையத்துள் வாழ்வாங்கு வாழ" வழிகாட்டும் வகையில் 1958 ஆம் ஆண்டு முதல் தொடங்கப் பெற்றதுதான் "திருக்கோயில்" ஆன்மிகத் திங்கள் இதழ் ஆகும்.

கடந்த 46 ஆண்டுக் காலங்களாகத் "திருக்கோயில்" ஆன்மிக இதழ் தமிழ்கூறு நல்லுலகிற்கு மிகச் சிறந்த ஆன்மிகக் கருவூலமாகத் திகழ்ந்து வருகின்றது.

ஒரு குறிப்பிட்ட வட்டத்திற்குள் வட்டமிட்டு வந்த இந்தத் "திருக்கோயில்" புறாவை வான்வெளி முழுதும் வலம்வரச் செய்து வையம் பயனுறச் செய்ய வேண்டும் என்பது நம் மக்களின் பலரின் வேண்டுகோளாக இருந்து வந்தது.

மக்களின் வேண்டுகோளை ஏற்று மே 2004 முதல் "திருக்கோயில்" ஆன்மிக இதழைப் புதிய பொலிவுடன் வெளியிட முடிவு செய்தோம்.

வண்ணப் படங்களுடன், மக்களுக்கு வழிகாட்டும் தலைசிறந்த திருத்தல விளக்கக் கட்டுரைகள், நீதிக் கதைகள், தொடர் கட்டுரைகள், கேள்வி - பதில்கள் மற்றும் எண்ணற்ற அரிய செய்திகளுடன் அதிகப் பக்கங்களைக் கொண்டு மக்கள் ஒவ்வொரு மாதமும் போற்றிப் பாதுகாக்கும் பக்திக் கருவூலமாகத் "திருக்கோயில்" இதழை மெருகூட்டிப் புதிய பொலிவுடன் வெளியிட முடிவு செய்து மே 2004 "திருக்கோயில்" இதழை உங்கள் இதயங்களை வருடி இதமளிக்க உங்கள் கைகளில் தவழச் செய்துள்ளோம் என்பதைப் பெருமகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

"சென்ற காலத்தின் பழுதிலாத் திறமும்
இனி எதிர் காலத்தின் சிறப்பும்
இன்றெழுந்தருளப் பெற்ற பேறு இதனால்
எற்றைக்கும் திருவருள் உடையோம்"

என்ற தெய்வச் சேக்கிழார் அருள்வாக்கிற்கு இணங்க உங்கள் அனைவருடைய ஒத்துழைப்பையும் தந்துதவ அன்புடன் வேண்டுகின்றேன்.

அன்புடன்,

[ஜி.இராமகிருஷ்ணன், இ.ஆ.ப.]
ஆணையர், இந்து சமயஅறநிலைய ஆட்சித்துறை

பழனியில் தொடங்கப்படும் தொங்கு உந்துரயில் திட்டம் (ரோப் கார்)

பழநி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் பக்தர்கள் வசதிக்காக ரூ.4 கோடி செலவில் தொங்கு உந்துரயில் அமைக்கப் பட்டுள்ளது. இது நொடிக்கு 3 மீட்டர் வேகத்தில் செல்லக் கூடியது. 108 நொடிகளில் கீழிருந்து மேலும், மேலிருந்து கீழும் சென்று விடலாம். 20 பெட்டிகள் இணைக்கப்படுகிறது. ஒரு பெட்டிக்கு 4 நபர்கள் அமர இருக்கை வசதியுள்ளது. ஒரு மணி நேரத்தில் 800 நபர்கள் பயணிக்கலாம். விரைவில் தொங்கு உந்துரயில் பயன்பாட்டிற்கு வரவுள்ளது.

திருமுகத்தில் தழும்புகள்

பார்த்தசாரதிப் பெருமானின் உற்சவ மூர்த்தம் என்னும் திருவுருவத்தின் திருமுகத்தில், தழும்புகள் பல அமைந்திருப்பதைக் காணலாம். குருக்ஷேத்திரத்தில் நிகழ்ந்த பாரதப்போரில், பீஷ்மருக்கும் பார்த்தனுக்கும் கடும்போர் நிகழ்ந்தபோது, பரசுராமரிடம் விற்பயிற்சி பெற்ற பெரு வீரராகிய பீஷ்மாச்சாரியரின் கணைகள் பார்த்தன் மேல்பட்டு, அவனுக்குக் கேடு நிகழாதபடி செய்வதற்காக, அவற்றைக் கண்ணபிரான் தாமே தம் கருணையினால் தம்மேல் ஏற்றுக் கொண்டு காப்பாற்றியருளிய பெருந்தகைமையை, அத்தழும்புகள் குறிக்கின்றன.

ஆலயங்களின் பராமரிப்பு அவற்றின் நிர்வாகம் மற்றும் அவற்றைச் சார்ந்த அறக்கட்டளைகளின் நிர்வாக நெறிமுறை ஆகியவற்றைக் கண்காணிப்பது அரசின் தலையாய கடமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு 1925ம் ஆண்டிற்கு முன்பு இந்து சமய அறநிலையங்கள் மற்றும் அறக்கொடைகளின் நிர்வாகத்தைக் கட்டுப்படுத்திக் கண்காணிக்கும் பொருட்டு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

1925ஆம் ஆண்டில் நிறைவேற்றப் பட்ட சட்டம் 1ன்படி ஒரு தலைவரும் அவருடன் இரண்டு முதல், நான்கு ஆணையர்களும் அடங்கிய இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் வாரியம் ஒன்று நிறுவப்பட்டு, இந்து சமயக் கோயில்கள், மடங்கள் முதலியன கண்காணிக்கப் பட்டன.

நியமிக்கப்பட்டார். அவர் வாரியத்திற்கு பதிலாக அரசே இந்து சமயம் மற்றும் அறக்கொடைகளை நிருவகிக்கலாம் எனக் கருத்து தெரிவித்தார்.

இந்நிர்வாகம் மேலும் சீரான முறையில் செயல்படுவதற்கும் அதன் நிதியை பெருக்குவதற்கும் எவ்விதம் திருத்தி அமைக்கலாம் என்று பரிந்துரை செய்ய 1942ல் உயர் நீதிமன்றத்தின் ஓய்வு பெற்ற நீதிபதி திரு. ப. வெங்கட்ரமணராவ் நாயுடு தலைமையில் ஒரு குழு நியமிக்கப்பட்டது.

இக்குழுவும் பல பரிந்துரைகளில் ஒன்றாக இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் வாரிய நிருவாகத்தினை மாற்றி மாநில அரசு நிருவாகத்துறையாக அமைத்தல் நல்லது என்று பரிந்துரை செய்தது.

இந்தப் பரிந்துரையை ஏற்றுக் கொண்டும்

அறநிலையத் துறை ஆற்றிவரும் அறப்பணிகள்

- திருமிகு ஜி. இராமகிருஷ்ணன் இ.ஆ.ப.
ஆணையாளர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

1925ம் ஆண்டைய மேற்கண்ட சட்டம் நீக்கப்பட்டு 1927ம் ஆண்டில் பிரிதொரு சட்டம் இயற்றப்பட்டது. அதன்பிறகு பல திருத்த சட்டங்கள் 1927 முதல் 1951 வரை உருவாயின.

1940ல் தனி அதிகாரி ஒருவர் (திரு ஆர்.வி. கிருஷ்ணய்யர்) வாரியத்தின் நிர்வாக முறைகளில் உள்ள குறைபாடுகளை நீக்கி வாரியத்தைச் சீர்படுத்தி அமைக்க

அன்று வரை அமலில் இருந்த பல்வேறு சட்டங்களைத் தொகுத்தும் ஒரு தொகுப்பு சட்டத்தை 1951ம் ஆண்டு தமிழ்நாடு இந்து சமயம் மற்றும் அறக்கொடைகள் சட்டமாக வெளியிட்டு 1960ம் ஆண்டு ஜனவரித் திங்கள் ஒன்றாம் நாளிலிருந்து செயல்படுத்தப் பட்டு வருகின்றது.

திருக்கோயில்கள் மற்றும் அறநிலையங்கள் ஆகியவற்றைச் சீரிய முறையில் நிர்வகிக்க வேண்டும் என்ற நோக்கில் தனிக்கவனம் செலுத்தும் பொருட்டு இந்து சமய கோயில்கள் மற்றும் சமண சமயக் கோயில்கள், அறக் கொடைகள், நிறுவனங்கள் ஆகியவற்றை முறையாகப் பேணுவது, பராமரிப்பது தொடர்பாக ஆன்மிகம் மற்றும் சமயத் தலைவர்களையும் ஈடுபடுத்தி அவர்களது கருத்துக்களையும் ஆலோசனை

களையும் பெறுவதற்கு 1991ம் ஆண்டில் தீர்மானிக்கப்பட்டு, 1959ஆம் வருடத்திய இந்து சமய அறக்கட்டளைகள் சட்டத்தில் பல்வேறு சட்டத் திருத்தங்கள் செய்யப்பட்டு அமலுக்குக் கொண்டு வரப்பட்டன.

மேற்கண்ட நடைமுறையின் பலனாக திருத்தப்பட்ட சட்டம் 1991 (திருத்தச் சட்டம் 46/91) அமலுக்கு வந்தது. இத்திருத்தப்பட்டச் சட்டத்தின் படி இரண்டு அடுக்கு முறை (அதாவது மாநில அளவில் திருக்கோயில் நிருவாக வாரியம் மற்றும் மாவட்ட அளவில் மாவட்டக் குழுக்கள்) எனப் பாகுபாடு செய்யப் பட்டது. மேற்படி திருத்தச் சட்டம் 13.12.1991 முதல் அமலுக்கு வந்தது.

1996ம் ஆண்டில் திருக்கோயில் நிர்வாக வாரியம் மற்றும் மாவட்டக்குழு என்ற அமைப்பினை முடிவுக்கு கொண்டு வந்து, ஏற்கனவே திருத்தச்சட்டம் 1991க்கு முன் இருந்த நிலையை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் மற்றும் சார்நிலை அலுவலர்களுக்கு அதிகார வரம்புகளை நிர்ணயித்து சட்டத் திருத்தம் செய்தது. திருத்தப்பட்ட சட்டம் 1996 (தமிழ்நாடு திருத்தச் சட்டம் 39 / 1996) இயற்றப்பட்டு 9.12.1996 முதல் அமலுக்கு வந்தது.

அறநிலையங்களின் எண்ணிக்கை:

இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை, தமிழகம் முழுவதுமுள்ள கீழ்கண்ட வகையான இந்து சமய மற்றும் சமண சமய அற நிலையங்கள் மற்றும் அறக் கொடைகள் நிர்வாகத்தை மேற்பார்வை செய்து வருகிறது.

அறநிறுவனங்களின் வகைப்பாடு :

சமய நிறுவனங்கள், அந்நிறுவனங்களின் ஆண்டு வருவாய் அடிப்படையில், பட்டியலில் சேர்ந்த நிறுவனங்கள் மற்றும் பட்டியலில் சேராத நிறுவனங்கள் என இரு வேறு வகைகளாக கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தப் பட்டுள்ளது.

1.	திருக்கோயில்கள்	36.363
2.	மடங்கள்	56
3.	மடங்களுடன் இணைந்த திருக்கோயில்கள்	57
4.	குறிப்பிட்ட கட்டளைகள்	1721
5.	அறக்கட்டளைகள்	189
6.	சமண அறநிறுவனங்கள்	17
	மொத்த நிறுவனங்கள்	**38.403**

சமயம்

சமயம் என்றால் பண்படுத்தப்பட்டது - பண்படுத்துவது பக்குவப்படுத்துவது என்பது பொருளாகும்.

அறுவகைச் சமயங்கள்

1. காணாபத்யம் - கணபதியை வழிபடுவது
2. கௌமாரம் - முருகனை வழிபடுவது
3. சௌரம் - சூரியனை வழிபடுவது
4. சாக்தம் - சக்தியை வழிபடுவது
5. சைவம் - சிவனை வழிபடுவது
6. வைணவம் - திருமாலை வழிபடுவது

சுற்றுலாப் பொருட்காட்சியில் அமைக்கப்பட்டிருந்த இந்து சமய அறநிலையஆட்சித் துறை அரங்கிற்கு இரண்டாம் பரிசினை தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திருமதி லட்சுமி பிரானேஷ், இ.ஆ.ப. அவர்கள் வழங்குகிறார்கள். அறநிலையத்துறை ஆணையாளர் திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப. அவர்கள் பெற்றுக்கொள்கிறார்கள். சுற்றுலாதுறை செயலர் திருமிகு. வ. இராமதாஸ், இ.ஆ.ப. அவர்கள் இடதுபுறம் உள்ளார்.

நிர்வாகக் கட்டமைப்பு

அ) ஆணையாளர் இத்துறையின் ஒட்டுமொத்த நிர்வாகத்திற்குத் தலைவராவார். துறையின் பொது நிர்வாகம், மேற்பார்வை மற்றும் செயல்பாடுகள் அனைத்திற்கும் இவரே பொறுப்பானவர். துறையின் தலைமையிடத்தில் ஆணையருக்கு உதவியாக கீழ்க்கண்ட அலுவலர்கள் இருப்பர்.

1. ஒரு சிறப்புப்பணி அலுவலர் (இ.ஆ.ப.) நிலையில்.
2. ஒரு கூடுதல் ஆணையர்
3. ஒருஇணை ஆண்யர் (தலைமையிடம்)
4. ஒரு இணை ஆணையர் (திருப்பணி)
5. உதவி ஆணையர் நிலையிலான ஆணையரின் நேர்முக உதவியாளர் மற்றும் உதவி ஆணையர் நிலையிலான ஒரு ஆணையரின் கூடுதல் நேர்முக உதவியாளர்.
6. ஒரு உதவி ஆணையர் (சட்ட சேர்மம்)
7. ஒரு உதவி ஆணையர், (நகைகள் சரிபார்ப்பு) தலைமையிடம். இவர் அன்னதான திட்டப் பணிகளின் சிறப்பு அலுவலராகவும் இருந்துவருகிறார்.

மேலும் திருக்கோயில்களுக்கு சொந்தமான அசையாசொத்துக்களைப் பராமரிப்பது, நிர்வகிப்பது மற்றும் அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானத்தை பெருக்குவதற்கான முறைகளை ஏற்படுத்து வதற்கும் அரசுக்கு ஆக்கபூர்வமான ஆலோசனைகளை வழங்க ஓர் உயர்நிலைக் குழு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை ஒருங்கிணைக்க சிறப்புப்பணி அலுவலர் ஒருவர் இந்திய ஆட்சிப்பணி நிலையில் உள்ளார். இவருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் நிலையில் தனி அலுவலர் ஒருவர் உள்ளார். இதுதவிர மூன்று சிறப்பு வட்டாட்சியர்களும், சிதம்பரம் அருள்மிகு சபாநாயகர் திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களைக் கண்டறிய தேவையான பணியாளர்களுடன் ஒரு சிறப்பு வட்டாட்சியரும் உள்ளனர்.

இதைத்தவிர 2002ஆம் ஆண்டில் திருக் கோயில்களின் திருப்பணி மற்றும் குடமுழுக்குப் பணிகள் விரைவில் நடை பெறவும் நெறிமுறைப் படுத்தவும் கண் காணிக்கவும் ஆலோசனைகள் வழங்கவும் ஒரு ஆலோசனைக்குழு அரசால் ஏற்படுத்தப்பட்டு இதற்கென உள்ள இணை ஆணையர் (திருப்பணி) அவர்களால் கவனிக்கப் பட்டுவருகிறது.

ஆ) மண்டலம் மற்றும் கோட்டம் வாரியாக முறையே 10 இணை ஆணையர்களும், 22 உதவி ஆணையர்களும், திருவாரூர் சிலைகள் பாதுகாப்பு மையத்திற்கு ஒரு உதவி ஆணையரும், 9 உதவி ஆணையர்கள் (நகைகள் சரிபார்ப்பு) மற்றும் ஒரு துணை ஆணையர் (நகைகள்சரிபார்ப்பு), மேலும் இணை ஆணையர் நிலைமுதல், செயல் அலுவலர் நிலை 4 வரை பல்வேறு நிலையில் 629 செயல் அலுவலர்களும் உள்ளனர்.

படிக்காசு விநாயகர்

ஒரு காலத்தில் சோழநாட்டில் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. திருவீழிமிழலையில் தங்கியிருந்த அப்பருக்கும், சம்பந்தருக்கும் சிவபெருமான் நாள்தோறும் படிக்காசு வழங்கி அருள் புரிந்தார். படிக்காசு பெற்ற அப்பரும், சம்பந்தரும் அன்னதானம் நாள்தோறும் புரிந்து மக்களின் வயிற்றுப் பசி களைந்தனர்.

இவ்வரலாறு பற்றித் திருவீழிமிழலை விநாயகருக்குப் படிக்காசு விநாயகர் எனப் பெயர் வழங்குகின்றது.

“பாரறிய அனுதினமும்
வீழிமிழலை தனில் முன்
படிக்காசு வைத்த கணபதி இருதாள் பணிவாம்”

என்பதுதிருவீழிமிழலைத் தலபுராணப்பாடல் ஆகும்.

இவர்கள் சட்டம் மற்றும் அதன் கீழ் இயற்றப்பட்ட விதிகளை அமல்படுத்த உதவுகின்றனர். இதுதவிர பழனி அருள்மிகு தண்டாயுதபாணிசுவாமி திருக்கோயிலில் ஒரு துணை ஆணையர் மற்றும் ஒரு உதவி ஆணையர் நிலையிலான நேர்முக உதவியாளர், இணை ஆணையர் மற்றும் செயல் அலுவலருக்கு உதவி புரிகின்றனர்.

இ) சமய நிறுவனங்களின் நகைகள் மற்றும் பொன், வெள்ளி விலையுயர்ந்த கற்கள் போன்றவற்றை உதவி ஆணையர் (நகைகள் சரிபார்ப்பு) அவர்தம் தொழில்நுட்பப் பணியாளர்களுடன் மதிப்பீடு செய்கின்றனர்.

ஈ) சமய நிறுவனங்களின் திருப்பணி வேலைகளுக்கான மதிப்பீடு தயார் செய்யவும், திருப்பணி வேலைகளை மேற்பார்வையிடவும் ஆணையருக்கு உதவியாக, ஒரு கண்காணிப்புப் பொறியாளரும், ஒரு செயற்பொறியாளரும், தேவைக்குரிய தொழில்நுட்பப் பணியாளர்களும் உள்ளனர்.

உ) இத்துறையின் வரவு-செலவுத் திட்டம் மற்றும் கணக்கு ஆகியவற்றிற்குக் கருவூலக் கணக்குத் துறையைச் சேர்ந்த ஒரு முதுநிலை கணக்கு அலுவலரும் அவருக்கு உதவியாக உதவி கணக்கு அலுவலர் ஒருவரும் பொறுப்பு வகிக்கின்றனர்.

ஊ) சமயநிறுவனங்களின் வரவு-செலவு கணக்குகளைச் சரிபார்த்து தணிக்கை செய்யும் பொருட்டு போதிய சார்நிலை அலுவலர்களுடன் அரசு நிதித்துறையிலிருந்து துணைச் செயலர் நிலையில் மாற்றுப் பணியில் தலைமைத் தணிக்கை அதிகாரி பணிபுரிந்து வருகிறார்.

எ.) மகளிரை செயல் அலுவலராக நியமித்தல்

முதன் முறையாக மகளிர், உதவி ஆணையர்களாக தமிழ்நாடு அரசு பணியாளர்கள் தேர்வாணையத்தின் மூலமாக 1996ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பணியில் அமர்த்தப்பட்டனர்.

வரவேற்கும் வாசகர்கள்

புதிய பொலிவுடன் ஒவ்வொரு மாதமும் பக்திக்கருவூலமாகத் திருக்கோயில் இதழ் உலா வரவுள்ளது பற்றி மிக்க சந்தோஷம், வாழ்த்துகள். தினசரிகள் விற்கும் பெட்டிக் கடைகளில் "திருக்கோயில்" இதழ் கிடைத்தால் வாங்க சௌகரியமாக இருக்கும்.

- என். ஆர். சீனிவாசன், பெசன்ட் நகர்

"திருக்கோயில்" திங்கள் இதழ் புதிய பொலிவோடு புனிதம் நிறைந்ததாய் வெளிவரவுள்ளது ஆன்மிக அன்பர்களாகிய எங்களுக்கு ஆனந்தப் பரவசத்தை அளிக்கிறது. மக்கள் மனதில் ஆன்மீகம் பரப்ப அற்புதமாய் பவனிவரப் போகும் "திருக்கோயில்" இதழை வாழ்த்தி வரவேற்கிறோம்.

- த.சத்தியநாராயணன், அயன்புரம்.

சமய உலகிற்குத் தாங்கள் செய்து வரும் பத்திரிகைத் தொண்டு மாபெரும் சிறப்புடையது.

- பி.கதிர்வேலு, விருத்தாசலம் - 606 001.

திருக்கோயில் புதிய பொலிவுடன் வெளிவருவதை வரவேற்கிறேன். அதில் முன்னரே திருவள்ளுவர் ஆண்டு இடம் பெற்றிருந்தது. மறவாமல், தவறாமல் திருவள்ளுவர் ஆண்டு இதழில் அச்சிட அன்புடன் வேண்டுகின்றன்.

- கல்பாக்கம் வேம்பையன், மறைமலைநகர்

"திருக்கோயில்" இதழைப் புதிய பொலிவுடன் வெளியிடுவது ஒரு உயரிய குறிக்கோள் மட்டும் அல்ல. நம்சமயத்துக்குப் பெருமை சேர்ப்பது. புத்தாண்டன்று இது புது மெருகு.

- வேங்கடேச நடராஜன், குரோம்பேட்

"தேரேறி வந்த தெய்வம்
திருவீதி வலம்வந்து
ஊரார்க்கு அருள்புரிந்து
உன்னதங்கள் புரிவதுபோல்-இத்
"திருக்கோயில் தீபத்தைத்"
திங்கள்தோறும் இல்லத்தில்
விருப்பமுடன் வரவேற்போம்!
வெற்றிநலம் நாம்பெறுவோம்"

-கவிஞர் முருகனடிமை

சென்னை உயர் நீதிமன்றம் ரிட் மனு எண். 21823/2001ல் 5.6.2002ல் வழங்கிய உத்திரவு மற்றும் அரசின் கொள்கை முடிவின் அடிப்படையில் பெண்களும் திருக்கோயில் செயல் அலுவலராக நியமனம் செய்யப்படலாம் எனப் பணிவிதிகளில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாணைக்குப் பின் உதவி ஆணையர் நிலையில் ஐவரும், துணை ஆணையர் நிலையில் மூன்று மகளிரும் செயல் அலுவலர்களாக நியமனம் செய்யப் பட்டுள்ளனர். தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் கடிதம்எண்.2470/OTD பி4/2000 நாள் 29.10.2003 மற்றும் 2.1.2004இன் கீழ் நிலை-4 செயல் அலுவலர்களாக 25 மகளிர் தேர்வு செய்யப் பெற்று, அவர்களுள் 23 மகளிர் செயல் அலுவலர்களாக தற்போது பணியாற்றி வருகின்றனர்.

திருவிழாக்களின் தத்துவம்

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் பத்து நாள் திருவிழாக்கள் ஆதாரமாகக் கொண்டு விளங்குகின்றன.

ஏ) இந்து சமய அறநிலையத்துறை மாநில அளவில் 10 மண்டலங்களாகவும், மற்றும் 22 கோட்டங்களாகவும் ஆட்சி எல்லைகள் பிரிக்கப்பட்டு, முறையே இணை ஆணையர்களாலும் மற்றும் உதவி ஆணையர்களாலும் கீழ்க்காணும் வகையில் நிர்வகிக்கப்பட்டு வருகிறது.

வ. எண்.	மண்டலங்கள்	வ. எண்.	உள்ளடங்கிய கோட்டங்கள்
1.	இணை ஆணையர், சென்னை	1.	உதவி ஆணையர் சென்னை
2.	இணை ஆணையர், வேலூர்	2.	உதவி ஆணையர், காஞ்சிபுரம்
		3.	உதவி ஆணையர், வேலூர்
		4.	உதவி ஆணையர், திருவண்ணாமலை
3.	இணை ஆணையர், சேலம்	5.	உதவி ஆணையர், சேலம்
		6.	உதவி ஆணையர், தர்மபுரி
4.	இணை ஆணையர், கோயம்புத்தூர்	7.	உதவி ஆணையர், கோயம்புத்தூர்
		8.	உதவி ஆணையர், ஈரோடு
5.	இணை ஆணையர், தஞ்சாவூர்	9.	உதவி ஆணையர், தஞ்சாவூர்
		10.	உதவி ஆணையர், நாகப்பட்டினம்
6.	இணை ஆணையர், மயிலாடுதுறை	11.	உதவி ஆணையர், கும்பகோணம்
		12.	உதவி ஆணையர், கடலூர்
		13.	உதவி ஆணையர், விழுப்புரம்
7.	இணை ஆணையர், திருச்சிராப்பள்ளி	14.	உதவி ஆணையர், திருச்சிராப்பள்ளி
		15.	உதவி ஆணையர், அரியலூர்
		16.	உதவி ஆணையர், புதுக்கோட்டை
8.	இணை ஆணையர், மதுரை	17.	உதவி ஆணையர், மதுரை
9.	இணை ஆணையர், சிவகங்கை	18.	உதவி ஆணையர், விருதுநகர்
		19.	உதவி ஆணையர், பரமக்குடி
10.	இணை ஆணையர், திருநெல்வேலி	20.	உதவி ஆணையர், திருநெல்வேலி
		21.	உதவி ஆணையர், தூத்துக்குடி
		22.	உதவி ஆணையர், நாகர்கோயில்

- தொடரும்

நெல்லை அருள்மிகு நெல்லையப்பர்

திருக்குட நீராட்டு விழா



"திக்கெலாம் புகழுறும் திருநெல் வேலியுறை செல்வர் தாமே"

என்று நெல்லை அருள்மிகு நெல்லையப்பரைப் போற்றிப் புகழ்கின்றார் திருஞானசம்பந்தர்.

பாண்டி நாட்டுப் பாடல் பெற்றத் திருத்தலங்கள் பதினெட்டில் பழமையும் பெருமையும் மிக்க திருத்தலம் நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் திருத்தலம்.

வேதபட்டர் இறைவருக்குத் திரு அமுது ஆக்குவதற்கு உலரப் போட்டிருந்த நெல், மழையினால் நனையாதவாறு வேலியிட்டுக் காப்பாற்றியபடியால் இத்தலத்திற்கு 'நெல்வேலி' எனப் பெயர் உண்டானதாகத் தலபுராணம் போற்றுகின்றது.

இறைவருக்கு நெல்வேலிநாதர், நெல்லையப்பர் என்பது திருநாமம். அம்பாள் காந்திமதி அம்மை, வடிவுடையம்மை என அழைக்கப்படுகின்றார்.

கயிலை திருமணக் காட்சியை அகத்தியர் திருநெல்வேலியில் கண்டு இன்புற்றதாகவும் தலபுராணம் கூறுகின்றது.

அம்பாளைச் சிவபெருமானுக்குத் தாரைவார்த்துக் கொடுக்கும் நிலையில் கோவிந்தராஜரும் இச்சந்நிதியிலேயே தனிக்கோயில் கொண்டு திகழ்வதால் இத்திருத்தலம் சைவ - வைணவசமய ஒற்றுமைக்கும் எடுத்துக்காட்டாகத் திகழ்கின்றது.

நடராஜரின் பஞ்ச சபைகளில் இங்குள்ள சபை "தாமிரசபை" எனவும், நடராஜர் " தாமிர சபாபதி" எனவும் அழைக்கப் படுகின்றார்.

உச்சிக்காலத்தில் காந்திமதி அம்பிகையே இறைவனை நேரில் வழிபடுவதாக ஐதீகம்.

இக்கோயிலில் உள்ள "ஜுரதேவர்" சந்நிதி குறிப்பிட வேண்டிய சந்நிதியாகும். "ஜுரதேவர்" மூன்று தலைகள், மூன்று கால்கள், மூன்று கைகளுடன், கைகளில் தண்டம், மணி, சூலத்துடன் காட்சி தருகிறார்.

சுரம்உள்ளவர்கள் இம்மூர்த்திக்கு மிளகு அரைத்துச் சார்த்தி, வெந்நீரால் அபிஷேகம் செய்தால் சுரம் உடனே ஓடிவிடும்.

இத்திருத்தலத்தில் உள்ள "பொல்லாப்பிள்ளையார்" சந்நிதியும் மிகவும் விசேஷமானது. இப்பிள்ளையாரைவேண்டி 41 நாட்கள் விரதம் இருந்தால் பிள்ளைப்பேறு உண்டாகும்.

குழந்தை பெற்றபின் அக்குழந்தையைக் கொண்டுவந்து பிள்ளையார் சந்நிதியில் உள்ள சன்னல் வழியாக உட்புறமாகத் தந்து வெளிப்புறமாக வாங்கும் வழக்கம் உள்ளதால் இப்பிள்ளையாருக்குப் "பிள்ளைத் துண்டு விநாயகர்" எனவும் பெயர் வழங்குகின்றது.

இத்தகைய மகிமைமிக்க நெல்லை அருள்மிகு நெல்லையப்பர் ஆலயத்திற்கு 30 ஆண்டுகளுக்குப் பிறகு மூன்றரைகோடி ரூபாய் செலவில் திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 7.4.04 அன்று திருக்குட நீராட்டுவிழா, 5 லட்சம் பக்தர்கள் கலந்துகொள்ள மிகச்சிறப்பாக நிகழ்ந்தது.

பஞ்சபூதத் தலங்கள்

1. நிலம்	-	திருக்காஞ்சி, திருவாரூர்
2. நீர்	-	திருவானைக்காவல்
3. காற்று	-	திருக்காளத்தி
4. அக்னி	-	திருவண்ணாமலை
5. ஆகாயம்	-	தில்லைச் சிதம்பரம்

முயலகன் மீது ஆடுவது ஏன்?



முயலகனைப் பூதம், அசுரன், அபஸ்மாரன் முதலிய பெயர்களாலும் குறிப்பிடுவார்கள். முயலகன் ஆணவமலத்தின் அறிகுறி. ஆணவமலம் என்றும் அழியாது. முத்திநிலையில், உயிர்களின் பால் ஆணவமலம் அடங்கிக் கிடக்கும். ஆணவமலம் முத்திநிலையில் உயிர்களின் பால் அடங்கிக் கிடக்கும் தன்மையை உணர்த்துவதற்கே நடராஜப் பெருமான் முயலகன் மீது ஆடுகின்றார்.

பண்ணாரி அருள்மிகு மாரியம்மன் குண்டந்திருவிழா

கொங்குநாட்டின் வடமேற்கு எல்லையருகில் வீற்றிருக்கும் அருள்மிகு பண்ணாரிமாரியம்மன் மிகவும் சக்திவாய்ந்த தெய்வமாகும்.

அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் மகா சக்தி பீடமாக விளங்கி, மாக்களை மக்களாக்கியும், தீராத வினைகளைத் தீர்த்தும், மாறாத பிணிகளைப் போக்கியும், கண்ணொளி அற்றோர்க்குக் கண்ணொளி கொடுத்தும், நினைத்த காரியங்களை நிறைவேற்றியும், பக்தர்கள் வேண்டியதை வேண்டியவாறு கொடுத்து அருள்பாலிக்கிறாள். அன்னை அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் ஆலயம் பெரியார் மாவட்டம் சத்தியமங்கலம் வட்டம் சத்தியமங்கலத்திலிருந்து மைசூர் செல்லும் பாதையில் 12 கி.மீ. தொலைவில் தெற்குப் பார்த்த வண்ணமாக உள்ளது.



பண்ணாரி மாரியம்மன் சுயம்பு லிங்க வடிவாக காட்சிதருகிறாள். இந்தத் தலத்தின் மூர்த்தி மிகச் சிறப்புடையது. அம்பிகை சுயம்புவாக அமைந்திருப்பது யாவரும் போற்றிப் பணிந்து புலன்களைப் பலவழிச் செல்லவிடாது ஒரு வழிப்படுத்தும் பக்தகோடிகள் செய்த தவப்பயனேயாகும்.

இத்தலம் எல்லாம் முன்பு வனங்களாகவும், புதர்களாகவும் இருந்தனவாம். அப்பொழுது சில ஊர்கள் எம்மனூர், நஞ்சையகவுண்டனூர், பரிசபாளையம், நிரவனூர், லம்பாடிக்கரை, கோகரை, நுணமத்தி, தொட்டமாளம் என்னும் பெயர்களுடன் இருந்தனவாம்.

இந்த ஊர்களிலிருந்தும், வெள்ளியம் பாளையம், பீக்கர்பாளையம், சிக்கரசம் பாளையம் முதலிய ஊர்களிலிருந்தும் குடியானவர்கள் தங்கள் மாடுகளை மேய்ப்பதற்கு வனத்திற்கு ஓட்டிவருவார்கள். மாடுகளுக்குப் பட்டிகள் அமைத்துக் கொள்வார்கள். ஒருநாள் பட்டியிலிருந்த காராம்பசு ஒன்று தனது தனத்தூறும் பாலை அம்பிகையாம் மூர்த்திக்குத்தன் அன்பைச் சொரிவதுபோல் சொரிந்தது.

இந்த மாதிரி பல நாட்கள் நடந்தும் மாட்டின் சொந்தக்காரருக்குத் தெரியவில்லை. இந்தப் பசுவைக் காலையிலும் மாலையிலும் பால் கறக்க எத்தனித்தால் கறப்பதற்கும் நில்லாமல், கன்றுக்கும் பால் ஈயாமல் முரண்படவும், பால் கறக்காமல் விட்டு விட்டு மற்ற பசுக்களைப் போல் இந்தப் பசுவையும் மேயவிடுவார். இந்தப்பசு வழக்கம் போல்தன் தனப்பாலை அம்பிகையின் திருமேனி மீது பெய்வதை மாட்டின்

உரிமையாளனாகிய குடியானவன் மறைவிலிருந்து ஒரு நாள் கண்டு கொண்டான்.

பின்புமாடு பால் சொரிந்த இடத்தில் ஏதோ அதிசயம் இருக்க வேண்டும் என்று நினைத்தான். அங்கு மாடுகள் மேய்த்துக்கொண்டிருந்தோர்களையும் முன் சொல்லிய ஊர்களிலிருந்து பல பெரியோர்களையும் அழைத்துச் சென்று ஆவின்பால் வழிந்து ஓடிய இடத்தில் வந்து பார்ததனர். அவ்விடத்தில் (கனாங்குப்புல்) கணம் புற்கள் சூழ்ந்த ஓர் புற்றும், அதனருகில் ஓர் லிங்கத் திருஉருவும் இருக்கக் கண்டார்கள். கண்ணுற்ற அனைவரும் பரவசமடைந்தனர்.

அந்த நாளே இந்தச் செய்தியை வெள்ளியம்பாளையம், சிக்கரசம்பாளையம், பீக்கர்பாளையம் முதலிய ஊர்களுக்கும் மற்றும் அருகில் இருந்த ஊர்களுக்கும் தெரியப்படுத்தி அந்தந்த ஊர் பெரிய தனக்காரர்களையும், பொது மக்களையும் வரவழைத்து அவர்களுக்கு இந்த மூர்த்தியைக் காட்டித் திருவருளைச் சிந்தித்து யாதும் தோன்றாதவர்களாக நின்றார்கள்.

அப்போது அக்கூட்டத்திலுள்ள ஒருவருக்கு தெய்வாவேசம் உண்டாகித் தன்னை "பண்ணாரி மாரி" எனக் கொண்டாடிப் பணியும்படி ஆணை பிறப்பிக்கவும் அப்போதே பச்சிலைகளால் ஒரு பந்தல் அமைத்து தேவியைப் பூசித்தனர்.

பின்பு திருவிழா வைபவங்கள் நடத்தியும் பிறகு சில காலம் கழித்து கூரையால் ஒரு கோயில் அமைத்தனர். பின்னும் சில வருடங்கள் கழித்துக் கூரையை நீக்கி ஓடுகளால் வேயப்பட்ட கோயில் அமைத்தனர். பின்பு பல ஆண்டுகள் கழித்துக் கூரையை மாற்றித் தற்போதிருக்கும் கோபுரத்தோடமைந்த இந்தக் கோயிலைக் கட்டினார்கள் என்று பெரியோர்கள் வாயிலாகத் தெரிய வருகிறது.

மலையாளத்தில் வண்ணாரக்காடு என்ற ஊரிலிருந்து மைசூருக்குப் போக இந்த வனத்தின் வழியே சில வியாபாரிகள் பொதி மாடுகளில் வியாபாரத்திற்கு வேண்டிய பொருள்களை ஏற்றி வந்து ஓர் இரவு இவ்விடம் தங்கினார்கள் என்றும், அப்போது,



ஒருவருடைய கனவில் அம்பாள் தோன்றி "அன்பர்களே! நான் உங்களுடைய துணையாய் வந்தேன். இங்கே பண்ணாரி மாரி என எழுந்தருளியுள்ளேன். யாவரும் என்னைப் பணிந்து உங்கள் வியாபாரத்தைச் செய்யுங்கள்" எனக் கூறியதாகவும் சிலர் இயம்புகின்றனர்.

அம்பிகைக்குப் பால் சொரிந்த பசுவின் சொந்தக்காரர் வெள்ளியம்பாளையம் தனகார போரப்பக் கவுடர் என்றும், முதலில் தெய்வாவேசம் உண்டானது பீக்கர் பாளையம் நஞ்சப்பக் கவுடருக்கு என்றும் அதனால் அக்குடும்பத்திற்கு 'தேவராடிக் குடும்பம்' என்றும் பெயர் வழங்கி வருகிறதெனக் கூறுகின்றனர். இவர்கள் ஒக்கலியக் குடியானவர்கள்.

வில்லைக்கோயிலாக இருந்ததை மாற்றி, தற்போது உள்ள கோபுரத்தோடு கோயிலமைத்தும், மெரவணை ஏற்பாடு முதலியன செய்தவரும், சிக்கரசம்பாளையம் திருவாளர் வீரப்பகவுடர் அவர்களும், அவர்களது புத்திரர் உயர்திரு **சேவூரப்ப கவுடர்** அவர்களும் ஆவார்கள்.

அம்பிகைக்கு வழக்கம் போல் ஆண்டுதோறும் நடக்கும் திருவிழாவிற்கு அக்னிக் குண்டம் வளர்த்து அதில் பக்தகோடிகள் இறங்குவார்கள். ஓர் ஆண்டு ஒரு காட்டு இலாகா ஆங்கில அதிகாரி பயணியர் விடுதியில் தங்கியிருந்தார். குண்டத்திற்கு வனத்தில் மரங்களை வெட்டிக் கொண்டுவந்து போடுவது எப்போதும் வழக்கம். இந்த மரங்களைக் கரும்பு என்றும் தீப்பொறிகளைப் பூ என்றும் சொல்வார்கள். காட்டிலாக்கா ஆங்கில அதிகாரி குண்டத்துக்கு மரங்களை வெட்டக்கூடாது என்று தடுத்து விட்டார். அதனால் குண்டம் ஏற்படுத்த நேரம் அதிகம் ஆனதோடு திருவிழாவுக்கும் தடங்கலேற்பட்டது. உடனே தேவியின் கிருபையால் அந்த அதிகாரிக்கு வாந்திபேதி கண்டு, துன்பமுற்று கோவிலுக்குச் சொல்லியனுப்பி தீர்த்தம் விபூதி தருவித்து அணிந்து கொண்டு தேவியைப் பணியவும், வாந்தி பேதி குணமடைந்தது. அவர் மனம் மாறி உடனே குண்டத்திற்குக் கரும்பு வெட்டுவதற்கு அனுமதி கொடுத்தார். திருவிழா வழக்கம்போல் நடந்தது என்று கூறப்படுகிறது.

மற்றொரு ஆண்டில் ஓர் ஆங்கில அதிகாரி பயணியர் விடுதியில் தங்கியிருந்தார். கோயிலில் நடக்கும் மேளதாளங்கள், ஆடல், பாடல்கள் முதலியவைகளை நடக்காமலிருக்கக் கட்டளையிட்டார். கொஞ்ச நேரம் ஆடல் பாடல்களை, மேளதாளங்களை நிறுத்தினர். உடனே பாம்பணிந்த இரு பெண்கள் மகுடக்

வள்ளல்பெருமானாரின் திருவுருவப் படத்தைப் புகைப்படம் எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும் என அவர் வாழ்ந்த காலத்தில் அவருடைய அன்பர்கள் பலர் முயன்றுள்ளனர்.

ஆனால் வள்ளல் பெருமான் புகைப்படம் எடுத்துக் கொள்ள ஒருபொழுதும் இசையவில்லை. அவருடைய விருப்பத்திற்கு மாறாக அவருடைய அன்பர் மாசிலாமணி முதலியார், எட்டுமுறை புகைப் படம் பிடித்துப் பார்த்த போது, புகைப் படத்தில் வெறும் வெள்ளை வேட்டி மாத்திரமே தென்பட்டுள்ளது.

அவருடைய திருமுகமோ, கைகளோ, கால்களோ புகைப்படத்தில் சிறிதும் தென்படவே இல்லை.

வள்ளலார்மேல் பெரும்பக்தி பூண்ட குயவன் ஒருவன், வள்ளலார் உருவத்தைக் களிமண்ணால் அமைத்து உரிய வர்ணங்களையும் தீட்டி, வள்ளலாரிடம் கொண்டு வந்து காட்டினார்.

வள்ளலார் அதைவாங்கிப் "பொன்னான மேனி மண்ணாயிற்றே" என்று கூறி வீசி எறிய, அம்மண் உருவம் சிதைந்து தூளாகி விட்டது.

வள்ளலார் மறைவிற்குப்பின் அக்குயவர் மீண்டும் அமைத்துத் தந்த வள்ளலாரின் திருவுருவத்தைப் புகைப்படம் எடுத்து, அதிலிருந்தே இன்று நாம் வழிப்பட்டு வரும் வள்ளலார் திருவுருவம் வழங்கி வருகின்றது.

சூலம் பிடித்த கையினராய் அந்த அதிகாரி முன் தோன்றினர். அவ்வதிகாரி பயந்து தான் கட்டளை இட்டது பெருந்தவறென எண்ணித் தேவியைப் பணிய, அப்பெண்கள் மறைந்தனர். மேளதாளங்கள் முழங்கின. திருவிழா இனிது நடந்தது எனக் கூறப்படுகிறது.

இன்னொரு சமயம் ஓர் ஆங்கில அதிகாரி தன் துப்பாக்கியில் குறி பழகுவான் வேண்டி அம்பாள் கோயில் சுவற்றில் குறிவைத்துச் சுட்டார். அதனால் அவர் கண்கள் ஒளி இழந்தன. குற்றம் உணர்ந்த அவ்வதிகாரி தேவியின் தீர்த்தத்தால் கண் ஒளி பெற்றான் என்றும் கூறப்படுகிறது.

இன்றைக்கு சுமார் 33 ஆண்டுகளுக்கு முன்னாள் சாமராஜ நகரம், கொள்ளேகாலம் செல்ல பெங்களூர் சேட் ஒருவர் தமது புதிய சிறிய உந்துவண்டியை (மோட்டார்) பண்ணாரி அம்மன் திருக்கோவிலுக்கு அருகில் செல்லும் சாலையில் நிறுத்திவிட்டு தம் அலுவல்களை முடித்து விட்டு அங்கிருந்தவர்களைப் பார்த்து இது என்ன சுவாமி கோவில் என்று கேட்டார். இது பண்ணாரி மாரியம்மன் கோவில் என்று சொன்னார்கள்.

அம்மன் கோயிலுக்கு அய்யன் கோயில் எங்கே? என்று கேலியாக பேசிவிட்டு சிறிது நேரம் கழித்து வண்டியைச் செலுத்துவதற்கு எத்தனித்தார். அவ்வண்டி எப்பக்கமும் போகாமல் நிலைத்து நின்றுவிட்டது. சேட்டு திகைத்து அங்கிருந்தவர்களைப் பார்த்து வண்டி நின்ற காரணம் என்னவாயிருக்குமெனக் கேட்டார். அவர்கள் நீ செய்த கேலியின் காரணமாயிருக்கும் என்று கூறினார்கள். சேட்டு தேவியைப் பணிந்து குற்றத்தை மன்னிக்குமாறு மன்றாடினார். பின் வண்டி நகர்ந்தது.

சேட் கீழே வந்து தேங்காய், பழம் வைத்து அம்மனைப் பூசித்தும், தேங்காய் சூரைக்காய் போட்டும் வணங்கினார். மலைக்குப் போகும் பேருந்து வண்டிக்காரர், மாட்டு வண்டிக்காரர் முதலிய யாவரும் போகும் போதும், வரும் போதும் அம்மனை பூசித்து சூரைத் தேங்காய் ஏராளமாகப் போடுவதை இன்றும் காணலாம்.

ஒரு யாத்ரீகர் வெகு காலத்திற்கு முன்பு அம்மன் சன்னதிக்கு வந்து, சுவாமி தரிசனம் செய்துவிட்டு, இரவு வந்ததும் கோயிலிலேயே தங்கிக் கொண்டார். அப்போது கோபுரமோ, சத்திரம் சாவடிகளோ இல்லை. மக்கள் நடமாட்டமும் கிடையாது. அதனால் பயந்த யாத்ரீகர் மீண்டும் அதிகம் பயம்கொள்ள, கோயில் வாசலுக்கு ஓர்புலி வந்தது. அதைக் கண்டு அவர் பயமுற்று நடுநடுங்கி அம்மனை தியானித்து, கோயிலின் தூலத்தின் மீது ஏறிக்கொண்டார். சிறிது நேரத்தில் புலி போய்விடவே அம்பிகையை தியானித்த வண்ணம் கண்ணயர்ந்தார்.

தேவி அவரின் கனவில்தோன்றி, "அப்பனே! நீ பயமுறாதே. இங்கே வந்திருந்த புலிக்கு ஆகாரத்திற்கு இடம் காட்டினோம்.

கரு காக்கும் கர்ப்பரட்சாம்பிகை

தஞ்சாவூர் மாவட்டம் பாபநாசத்திற்கு அருகில் அமைந்துள்ளது திருக்கருகாவூர் என்னும் திருத்தலம்.

இறைவன் முல்லை வனநாதர் எனவும், இறைவி கர்ப்பரட்சாம்பிகை எனவும் அழைக்கின்றனர்.

புத்திரபாக்கியம் இல்லாதோர் அம்பாள் சன்னதியில் வியாழக்கிழமை நெய்தீபம் ஏற்றி அர்ச்சனை செய்து மகப்பேறு பெறுகிறார்கள்.

கருகாத்த நாயகியை வேண்டினால் கருகாத்து சுகப்பிரசவமாகும்.

குழந்தை பாக்கியம் பெற்றவர்கள் நேர்த்திக் கடனை பூர்த்தி செய்ய தங்கள் குழந்தையை அம்மன் சன்னதியில் உள்ள தங்கத் தொட்டிலில் இட்டு வழிபாட்டை பூர்த்தி செய்வார்கள்.

முக்கிய மந்திரங்கள்

ஓம்நமச்சிவாய	-	ஈஸ்வரன்
ஓம் நமோ நாராயணாய	-	விஷ்ணு
ஓம் உமா தேவ்யை நம	-	சக்தி
ஓம் கணபதியே நம	-	கணபதி
ஓம் சரவண பவாய நம	-	முருகன்

சுசீந்திரம் தாணுமாலயசுவாமி

இந்திரன் தன் சாபம் நீங்க பிரம்மா (தாணு) திருமால், சிவபெருமான் ஆகிய மும்மூர்த்திகளையும் ஒருசேர பிரதிட்டை செய்து வழிபட்டு, சாபம் நீங்கிய திருத்தலமே சுசீந்திரம் ஆகும்.

தாணு, மால், அயன் ஆகிய மும்மூர்த்திகளும் ஒரே லிங்கவடிவில் காட்சி அளிக்கும் சுசீந்திரம் திருக்கோயில் பல்வேறு சிறப்புகளைக் கொண்டு விளங்குகின்றது.

அனைத்து கோவில்களிலும் விநாயகக் கடவுளையே முதலில் வழிபடுவர். ஆனால் இங்கு முதலில் வணங்கும் தெய்வம் தட்சிணாமூர்த்தி.

இக்கோயிலில் உள்ள நந்தி முழுக்க முழுக்க கடற்சங்கை மாவாக்கி அதில் அமைக்கப் பட்டுள்ளது. அர்த்தசாமத்தில் இந்திரனே இன்றும் இக்கோயிலுக்கு வந்து வழிபடுவதாக அய்தீகம்.

"அகம் கண்டதைப் புறம் கூறமாட்டேன்" என்று கர்ப்பக் கிரகத்திற்குள் சென்று பூஜை செய்யும் பூசாரிகள் சத்திய பிரமாணம் எடுத்துக் கொண்டுள்ளனர்.

மூலவரான தாணுமாலய சுவாமியின் அபிஷேகநீர் குமரி முனை சென்று கடலில் கலக்கின்றது.

எனக்குக் காணிக்கையாக விடப் பட்டிருந்த ஒரு காளையை என் சன்னதியில் கொண்டு வந்து விடாததால் அதைப் போய் பிடித்துக் கொள்ளச் சொன்னோம்" என்று கூறி, அந்தக் குறிப்பிட்ட இடத்தையும் தெரிவித்து மறைந்தாள்.

யாத்திரீகர் காலையில் எழுந்து அம்பிகை கனவில் கூறிய இடம் சென்று பார்க்கவும் இவ்விதமே நிகழ்ந்திருந்தது கண்டு திருவருளைச் சிந்தித்து இதனை யாவருக்கும் உரைத்தார். அந்தக் காளை இருந்த ஊர் பட்டமங்கலம். அது கோவிலுக்குத் தெற்கே எட்டுக்கல் தொலைவில் இருந்தது. இந்த ஊர் இப்போது பவானி சாகரில் மூழ்கி விட்டது. அதன் பெயரால் புது பட்டர்மங்கலம் என புதுப்பீர்கடவுக்குஅருகே கட்டப்பட்டிருக் கிறது.

மற்றும் ஓர் ஆண்டு திருவிழாவின் போது ஒருமுள்ளுக் குறும்பன் என்னும் மலைவாசி தன் மந்திர சக்தியால் உண்டாக்கிய புலி, கரடிகளையும் பக்தர் மீது ஏவினான், அதனால் பூசாரி முதல் யாவரும் குண்டத்திலிறங்க பயந்த தருணம், தன் சொரூபம் மாறியிருந்த சருக மாரியம்மன் கரடியைக் கல்லாக்கி, புலியைப் புற்றாக்கி முள்ளுக்குறும்பன் மனைக்குத் தீயிட்டு, அவனுக்குப் பலவித துன்பங்களைக் காட்டவும், அவன் தேவியை வணங்கி மன்னிப்புக் கேட்டுக் கொள்ள அனுக்கிரகம் செய்தும் இவ்வித மகிமைகள் காட்ட பக்தகோடிகள் பயமின்றி குண்டத்திலிறங்கி தேவியைப் பணிந்தனர் என்றும் பெரியோர்கள் கூறுகின்றனர்.

ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் உத்திரம் நட்சத்திரம் அதாவது பௌர்ணமிக்கு முந்தின பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை (அமாவாசைக்கு அடுத்த திங்கட்கிழமை. இது சில ஆண்டுகளில் முன், பின்னாய் வரும்) இரவு சிக்கரசம் பாளையம் புதூர், வெள்ளியம்பாளையம் முதலிய ஊர் பெரியதனக்காரர்களும், தர்மகர்த்தாக் களும், ஆலய அதிகாரிகளும் வந்திருந்து அம்மனுக்கு அபிசேக அலங்காரங்கள் செய்வித்து பூச்சாற்று நடத்தி வைப்பார்கள்.

திருக்குட நீராட்டுவிழா

இதற்கு ஆதாரம், குமரிமுனை அம்மன் கோவிலின் கிழக்குவாசலில் கடற்கரையை ஒட்டி 'தாணுதீர்த்தம்' என்று பலகை நாட்டப்பட்டு உள்ளதைக் கூறலாம்.

இக்கோயிலில் உள்ள விஷ்ணு சிலை நவபாஷாணத்தில் ஆனதால் அபிஷேகம் கிடையாது. எப்போதும் வெள்ளிக் கவசத்தால் மூடப்பட்டிருக்கும்.

விசுவரூபக்காட்சி கொடுக்கும் 22 அடி உயர ஆஞ்சநேயர் சிலை, மற்றும் 12 அடிய உயர சித்திபுத்தி சமேத விநாயகர் சிலை, தட்டினால் நாதம் எழும் 36 இசைத் துண்கள் முதலானவை கண்டு மகிழ வேண்டிய கலைக் கருவூலங்கள்.

விநாயகர் சந்நிதியின் மேல்கூரையில் ஒரே கல்லில் செதுக்கப்பட்டு காட்சிதரும் நவக்கிரகங்கள் வேறு எங்கும் காண முடியாத தனிச் சிறப்புமிக்கவை ஆகும்.

நவகிரக தோஷங்கள் யாவும் நீங்கி நல்வாழ்வு பெற நமக்கு அருள்புரிபவரே சுசீந்திரத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ உதய மார்த்தாண்ட விநாயகப் பெருமான்.

சுசீந்திரம் கோயிலுக்கு 20 ஆண்டுகளுக்கு முன்பு 1984 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 29 ஆம் தேதி திருக்குடநீராட்டு விழா நடைபெற்றுள்ளது.

தற்போது 1 கோடி ரூபாய் மதிப்பில் திருப்பணிகள் மிகச் சிறப்பாக நிறைவேற்றப்பட்டு, 9.4.04 அன்று மிகச் சிறப்பாகத் திருக்குட நீராட்டு விழா பல லட்சக்கணக்கான பக்தர்கள் காண நிகழ்ந்தது.

பூச்சாற்று நடந்த மறுநாள் தேவியை சப்பரத்தில் எழுந்தருளச் செய்து, அலங்கரித்து சிக்கரசம்பாளையம், வெள்ளியம்பாளையம், புதூர், தாண்டாம்பாளையம், சத்தியமங்கலம் இடையில் இன்னும் சில ஊர்களில் எழுந்தருளச் செய்து ஆங்காங்கு மக்கள் வேண்டுதல் முடித்து பூச்சாற்று செய்து முடிப்பார்கள்.

பூச்சாற்றிலிருந்து எட்டாம் நாள் திங்கட்கிழமை கோயில் வந்து சேருகிறாள் நம் தாய்.

பூச்சாற்றிலிருந்து ஒன்பதாம் நாள் செவ்வாய்க்கிழமை இரவு, முன் கூறிய பெரியோர்களால் அம்பிகைக்கு ஆராதனை செய்விக்கப்பெற்று, அன்றிரவு அக்கினிக் கம்பம் போடுவார்கள். அன்று முதல் அக்கம்பத்தருகே இரவுக் காலங்களில் சோலகர்களும், அருந்ததியினத்தாரும் தங்கள் தங்கள் வாத்தியங்களை முழக்கி ஆடல், பாடல்கள், செய்வதை. காணவும், கேட்கவும் ஆனந்தம் உண்டாகும். பூச்சாற்றிலிருந்து

ஓம்

எழுத்துக்கள் 'அ' என்ற ஒலியை அடிப்படையாக கொண்டன. 'அஉம்' என்பது "ஓம்" என ஒலிக்கின்றது. இப்பிரணவ ஒலி இறைவனே முதல்வன் என்ற கொள்கையை உணர்த்துகிறது.

அம்பிகைக்கு தினசரி அபிஷேக ஆராதனை நடைபெறும்.

பூச்சாற்றிலிருந்து பதினைந்தாம் நாள் திங்கட்கிழமை, பக்த கோடிகள் பல பக்கங்களிலிருந்தும், பேருந்து வண்டிகள், மிதி வண்டிகள் (சைக்கிள்), மாட்டுவண்டிகள் முதலியவைகளிலும், பாதசாரிகளாகவும், பல லட்சக்கணக்கில் வந்து கூடுவார்கள். அன்று சத்தியமங்கலம் கடைவீதிகளில் பந்தல் அமைத்து வாழை மரங்களாலும், மலர்த்தோரணங்களாலும் அலங்காரம் செய்திருப்பார்கள். ஆங்காங்கே தண்ணீர் பந்தல்கள் அமைத்து வாழை மரங்களாலும்,

மலர்த்தோரணங்களாலும் அலங்காரம் செய்திருப்பார்கள். ஆங்காங்கே தண்ணீர் பந்தல்கள் அமைத்து, நீர்மோர், பானகம் முதலியவைகள் வழங்குவார்கள். பக்தர்கள் சிலர் அக்கினிக் கரகம் ஏந்தியும், வேல், சூலம் முதலியவைகளைத் தாங்கியும், மேளதாளங் களுடன் ஆரவாரத்தோடு நடந்து செல்வார்கள்.

ஞாயிறு முதற்கொண்டே பக்தகோடிகள் பிரார்த்தனை முடிகளைதல் நடைபெறும். திங்களன்று பக்தகோடிகள் கூட்டம் முன்னிலும் அதிகரிக்கும். அதற்குத் தக்கபடியாக முடிகளைதலும் நடைபெறும். திருவிழாக் காலத்தைத் தவிர வெள்ளி, திங்கள், அமாவாசைகளிலும் மற்ற நாட்களிலும் முடிகளைதல் நடை பெறுகின்றன.

திங்கள் இரவு ஓர் அக்கினிக் குண்டம் ஏற்படுத்தப்படும். இக்குண்டத்திலும், முன் சொல்லிய அக்கினிக் கம்பத்திலும் பருத்தி, மிளகாய், கோழி, சேவல்கள், புகையிலை, தானியங்கள் சூரையிடப்படும். இந்தச் சமயத்தில் பக்தர்கள் திரளாகக் கூடுவர். வண்டி வாகனங்களும், மிதி வண்டிகளும் ஏராளமாக வந்து சேரும். இந்த பல லட்சக்கணக்கான ஜனத்திரளைக் காணும்போது அம்பிகையின் கருணை அன்பர்களை மெய் மறக்கச் செய்யும். அக்கூட்டத்தை பல நூற்றுக் கணக்கான காவல் அதிகாரிகள் பாதுகாப்பார்கள்.

குண்டத்தினருகே நரம்பு, புருடு, கண்மலர் இவைகளை ஏராள்மாக விற்பார்கள், கற்பூர விற்பனையும் நடைபெறும். திங்கள் இரவு இரண்டு மணியளவில் அம்மை அழைக்கப் புறப்படுவார்கள். தெப்பக்கிணற்றருகே சென்று அம்மையை அழைத்துக் குண்டத்தருகே வரும் போது பல லட்சக்கணக்கான மக்கள் திரள் திரளாகக் குழுமியிருப்பர். குண்டம் சமப்படுத்தப் பட்டிருக்கும், குண்டத்தருகே யாவரும் வந்து அம்மையைப் பணிந்து நிற்க, பூசாரியார் பூசை செய்து முதலில் குண்டத்தில் இறங்குவார். பிறகு வரிசையாக ஆண்களும் பெண்களும் இறங்குவார்கள். இது செவ்வாய் காலை 10 மணி வரை நடைபெறும். அதன்பிறகு கால்நடைகளும் இறங்குகின்றன. நடுப்பகலில் பொங்கல் மாவிளக்கு எடுப்பார்கள். (செவ்வாய்) புதன் இரவு மலர்ரதம் மின் விளக்குகளால் நன்கு அலங்கரிக்கப்பட்டு, அம்பிகையை எழுந்தருளச் செய்து, புறப்பாடு நாதசுரக் கச்சேரியுடன் நடைபெறும். மகாமுனி வருகையும், இரவில் அக்கினிக் கம்பம் பிடுங்குதலும் நடைபெறும், பின் கம்பத்தை கிணற்றில் விடுவார்கள்.

வியாழனன்று மஞ்சள் நீர் உற்சவமும், திருக்கோயிலாரால் அன்னதானமும் நடை பெறும். அன்று அம்மனுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறும்.

வெள்ளிக்கிழமையன்று மாலை அம்மனுக்குத் திருவிளக்குப் பூசை நடைபெறும். இப்பூசையில் ஏராளமான பெண்கள் கலந்துகொள்வார்கள்.

குண்டம் திருவிழா நடந்த எட்டாம் நாள் திங்கட்கிழமையன்று மறு பூசைத் திருவிழா நடைபெறும். ஞாயிற்றுக்கிழமை இரவிலேயே ஏராளமான பக்தர்கள் வந்து கூடிவிடுவர்.

அம்பிகைக்கு சிறப்பு அலங்காரம் அதாவது திருவிழாவன்று அலங்கரித்தது போல தங்கக் கவசம் அமைத்த விலையுயர்ந்த பொன்மணிகளும் அணிவித்து, மலர் மாலைகளால் ஒப்பனை செய்யப்படும். அபிடேகாதிகள் சிறப்பாக நடைபெறும்.

பண்ணாரி மாரியம்மனை வாழ்வில் ஒருமுறையேனும் தரிசித்து வழி படுதலே நாம் நம் பிறவி பெற்ற பெரும்பயன் ஆகும்.

பண்ணாரி வருக !
திருவருள் பெறுக !

திருவடிகளே துணை

நீங்கள் வேலை செய்து கொண்டிருக்கும் போது உங்கள் ஒரு கை வேலை செய்து கொண்டு இருக்கட்டும். மற்றொருகை கடவுளின் திருப்பாதங்களைப் பிடித்துக் கொண்டு இருக்கட்டும். வேலை முடிந்த பிறகு சும்மா இருக்கிற சமயத்தில் அந்தப் பரந்தாமனின் இரண்டு பாத கமலங்களையும் உங்கள் இரு கைகளாலும் பற்றி உங்கள் இருதயத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

- இராம கிருஷ்ண பரமஹம்சர்

இராமகிருஷ்ண பரமஹம்சர்

பாவம் செய்தது யார்?

ஒரு சன்னியாசி ஒரு கோயிலுக்குப் பக்கத்தில் வாழ்ந்து வந்தார். அவருடைய இருப்பிடத்திற்கு எதிரில் ஒருதாசி வீடு இருந்தது. அந்த வேசியின் வீட்டில் சதாசர்வகாலமும் ஆண்கள் கூடியிருப்பார்கள்; வருவதும் போவதுமாக இருப்பார்கள்.

இதைக் கண்ட அந்தச் சன்னியாசி ஒரு நாள் தாசியைக் கூப்பிட்டு "நீ பெரும் பாவியாகி விட்டாய். இரவும் பகலும் நீ பாவம் செய்து கொண்டே இருக்கிறாய். உனக்கு என்ன கதி வரப்போகிறதோ?" என்று சொல்லிக் கடுமையாகக் கண்டித்தார்.

தாசி, தான் செய்த பாவத் தொழில் களுக்கு, உளமாரப் பெரிதும் மனம் வருந்தினாள். மிகவும் வருத்தத்துடன் அவள் தன்னை மன்னித்து அருள வேண்டும் என்று இறைவனை நோக்கி உண்மையாகவும் உள்ளன்போடும் வேண்டிக் கொண்டாள். ஆனால் அவளது குலத் தொழிலே வேசித் தொழிலாக இருந்ததனால், வேறு வகையால் அவளால் வாழ்க்கைக் காலட்சேபத்தை நடத்தவும் முடிய வில்லை. ஆனாலும் வயிற்றுப் பிழைப்புக்காக உடலைவிற்க நேர்ந்த போதெல்லாம், அவள் உள்ளம் குழைந்து மன்னிப்பு வேண்டி பகவானைப் பிரார்த்திப்பது வழக்கம். தவறு செய்வதைத் தவிர்க்க இயலாத நிலையில், அந்த் அபலைப் பெண் மனம் கசிந்து உருகினாள், மன்னித்து அருள் புரியும்படி பகவானை நினைத்து மேலும் மேலும் உருக்கத்துடன் வேண்டிக் கொண்டே இருந்தாள்.

சன்னியாசிக்குத் தாசியின் உள்ளத்தில் ஏற்பட்ட போராட்டம் தெரியாது. அவள் மனநிலை அடியோடு முற்றிலும் மாறி அமைந்து விட்டதை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. வெளிப் படையாகத் தாசியின் வாழ்க்கையில் மாற்றம் ஒன்றும் ஏற்படாததால் தாம் கூறியதைக் கேட்காமல் தன் பழைய வாழ்க்கையையே தொடர்ந்து கொண்டிருக்கிறாள் என்று அவர் நினைத்தார். ஆகவே, அன்று முதல் அவளைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தார். யாராவது ஒருவர் அந்தத் தாசியின் வீட்டுக்குள் நுழைந்தால், உடனே சன்னியாசி ஒரு கூழாங்கல்லை எடுத்துப்போட்டு எண்ணிக் கொள்வார். இப்படி அவர் போட்டு வந்த கற்கள் காலக்கிரமத்தில் பெரிய குவியலாக அங்கேக் குவிந்தன.

ஒரு நாள் அந்த சன்னியாசி, இந்தக் கற்குவியலைத் தாசிக்கு சுட்டிக்காட்டி, "பெண்ணே, இந்தக் குவியலைப் பார்த்தாயா? நான் எந்தக் காரியத்தைச் செய்ய வேண்டாம் என்று சொன்னேனோ, அதே காரியத்தை நீ எத்தனை தரம் செய்திருக்கிறாய் என்பதை இந்தக் குவியலில் ஒவ்வொரு கல்லும் உனக்குத் தெரிவிக்கும், இப்போதும் சொல்கிறேன். வீணாகக் கெட்டுப்போகாதே. ஜாக்கிரதை யாக இரு" என்று சொன்னார்.

தாசி தன் பாவச் செயல்களைக் குறிக்கும் அவ்வளவு பெரிய கற்குவியலைக் கண்ட

மாத்திரத்திலேயே நடு நடுங்கினாள். துன்பம் அவளது உள்ளத்தைச் கசக்கிப் பிழிந்தது; கடைந்தெடுத்தது. ஆகவே, கண்ணீரும் கம்பலையுமாக அவள் உளமார வருந்தி "பகவானே, இப்படிப்பட்ட தீய செயலை இனியும் நான் செய்யாதபடி என் உயிரை கொண்டு போகக் கூடாதா? இப்படிப் பட்ட இழிந்த வாழ்க்கையிலிருந்து என்னை விடுவித்துவிடு" என்று தன் ஆதரவற்ற நிலையைச் சொல்லிக் கடவுளிடம் பிரார்த்தித்தாள்.

ஆண்டவன் அவளுடைய உண்மையான பிரார்த்தனைக்குச் செவி சாய்க்கவே செய்தார். அவளுடைய பிரார்த்தனையின் படியே அவள் உயிரை அன்றிரவே எமன் கொண்டு போனான். இறைவனின் லீலையைத்தான் என்ன என்று சொல்வது? அதே நாளில் அந்தச் சன்னியாசியும் இறந்து போனார்.

வைகுண்டத்திலிருந்து விஷ்ணு தூதர்கள் வந்து அந்த தாசியின் உயிரைச் சொர்க்கத்திற்கு அழைத்துப் போக ஆரம்பித்தார்கள். அதே சமயத்தில் எமபடர்கள் வந்து அந்தச் சன்னியாசியின் உயிரை நரகத்திற்கு கொண்டு போவதற்காகக் கட்டிப் பிணைத்தார்கள்.

தாசிப் பெண்ணுக்குக் கிடைத்த உயர்ந்த நற்கதியைப் பார்த்த சன்னியாசி "இது தானா ஆண்டவனுடைய நீதி? ஆயுள்முழுவதும் எளிய வாழ்க்கையிலும் தவத்திலும் கழித்த என்னை நரகத்திற்கும், தினந்தோறும் பாவம் செய்த தாசியை மோட்சத்திற்கும் அழைத்துப் போவது நியாயமாகுமா?" என்று கூறி அலறினார்.

இதைக் கேட்ட விஷ்ணு தூதர்கள் சொன்னார்கள்: "இறைவனின் நீதி எப்போது நியாயமானதாகத்தான் இருக்கும். நீ எதை நினைக்கிறாயோ அதையே பலனாக அனுபவிப்பாய். கௌரவத்தையும் புகழையும் பெறுவதற்காக நீ வீண் படாடோபத்துடன் காலம் கழித்தாய். பகவான் உனக்கு அவற்றைக் கொடுத்தார். உன் மனம் ஒரு போதும் அந்தரங்க சுத்தத்துடன் இறைவனை நாடியதே இல்லை. இந்தத் தாசியோ உடலால் பாவம் செய்தாலுங்கூட, உள்ளம் உருகி இரவும் பகலுமாக எப்போதும் இறைவனையே நினைத்துப் பிரார்த்தித்து வந்தாள்.

பூலோகத்தில் உன் உடலும், அவளது உடலும் அடைகிற மரியாதையை இப்போது பார். உடலால் நீ பாவம் செய்யவில்லை. ஆகவே உன் உடலை மலர்களால் அலங்கரித்து ஆற்றில் இடுவதற்காக மேளதாளங்களுடன் ஊர்வலம் கொண்டு போகிறார்கள். தாசி, உடலால் பாவம் செய்தாள். அவளது உடலை இந்த நேரத்தில் நாயும் நரியும் பிடுங்கித் தின்கின்றன. ஆனால் அவளது மனம் தூய்மையாக இருந்த காரணத்தால் அவள் சொர்க்கம் போய்க் கொண்டிருக்கிறாள். உன் மனம் எப்போதும் அவளுடைய பாவச் செயல்களைப் பற்றியே சிந்தித்ததினால் அசுத்தம் அடைந்தது. ஆகையால் நீ பாவம் செய்த ஆத்மாக்கள் உள்ள நரகத்திற்குப் போகிறாய், உண்மையில் நீயே பாவமும் வேசித்தனமும் செய்தவனே தவிர அவள் அல்ல".

கடவுளின் இயல்பு :

அகர உயிர் போல் அறிவாகி எங்கும் நிகரில் இறைவன் நிறைந்து நிற்கின்றான். அவன் தூய உடம்பினன்; இயற்கை அறிவினன்; எல்லாம் அறிபவன்; அஞ்ஞானத்தை தருவனவாகிய மலங்கள் இயல்பாகவே இல்லாதவன்; சுதந்திரன்; அனந்த சக்தியுடையவன்; பரிபூரணன்; பேரருள் உடையவன்.

பன்னிரெண்டு ஆண்டுக்காலம் வனவாழ்வு முடிந்து ஓராண்டுக்காலக் கரந்துறை வாழ்வும் முடிந்து, பாரோர் அறிய வெளிப்பட்ட பஞ்ச பாண்டவர்கள் தாம் இழந்த குரு நாட்டின் உரிமையை மீளப் பெறுவதற்காக உபப்பிலாவியம் என்ற இடத்தில் பாடிவீடு அமைத்துத் தங்கியிருக்கிறார்கள்.

காண்டீபம் எனும் வில்லின் ஆற்றலால் கர்ணனுடைய உயிரையும் மற்ற கௌரவர்களுடைய உயிரையும், உண்டு, நாட்டை அடைவதையே விரும்புகிறான்.

பாஞ்சாலியும் அவ்வாறே முன்னாளில் வஞ்சினம் உரைத்திருந்தாள் அல்லவா! "கௌரவர்களின் இரத்தத்தால்

மகாபாரதம்

முனைவர் த. அமிர்தலிங்கம்

அரவக் கொடியோன் துரியோதனன் அறம் மறந்து, முன்தான் உரைத்த வாக்கும் பிழைத்து, பஞ்சபாண்டவர்களுக்கு வீரம் இருந்தால் போர் புரிந்து அவர்களுக்கு உரிய நாட்டைப் பெற்றுக் கொள்ளட்டும் என தருமருக்குத் தூதாக நடந்த உலூகன் என்ற முனிவரிடம் சொல்லியனுப்பி விடுகிறான்.

இங்கே "தருமருக்குத் தூதாக நடந்த உலூகன்" என்று ஏன் குறிப்பிடப் படுகின்றது என்றால் "போரினை நாடாமல் சமாதான முறையிலேயே கேட்டு நாட்டுரிமைபெற வேண்டும் என்பது பஞ்சபாண்டவர்களில் அவர் ஒருவருக்கு மட்டுமே கருத்தாக இருப்பதனால் தான்.

வீமன் தன்னுடைய 'சத்துருகாதினி' என்ற கதாயுதத்தால் தான் முன்னம் செய்த வஞ்சினப்படி, துரியோதனனின் தொடையை பிளந்து உயிர் குடித்தும், பாஞ்சாலியின் ஆடையைக் களைந்து அவமானப்படுத்திய துச்சாதனனின் உயிர்குடித்தும், நாட்டை அடைவதையே விரும்புகிறான்.

அர்ச்சுனனும் அவ்வாறே தன்னுடைய

கூந்தலை நீவி, அவர்களின் என்புகளால் தலைச்சிக்கெடுத்த பின்பே கூந்தலை முடிவேன்", அவ்விதமே போரினால் நாட்டின் உரிமையை அடைய அவளும் விரும்புகின்றாள்.

நகுல சகாதேவர்களும் அவ்வாறே தோள்வலியினால் நாட்டையடைவதையே விரும்புகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் மாறாகத் தருமர் ஒருவர் மட்டுமே சமாதான முறைகளால் தாம் இழந்த நாட்டின் உரிமையை அடைய விரும்புகிறார். அதனால் தான் அவர் பொருட்டுத் தூது சென்று வந்த உலூக முனிவர் தருமரின் தூதுவர் என்று முன் குறிப்பிடப்பட்டார்.

தூதுசென்று வந்த உலூகர் "வலுவிருந்தால் அமர்புரிந்து நாட்டினைப் பெற்றுக்கொள்ளட்டும்" எனத் துரியோதனன் கூறியதைத் தருமரிடம் எடுத்துக் கூறிவிட்ட பிறகும்கூட அவருக்குப் போரினால் நாட்டினை அடைவது விருப்பமாக இல்லை.

ஆகவே தான் தம் பொருட்டுத்

துரியோதனனிடம் மீண்டும் தூது சென்று, இழந்த நாட்டுரிமையைச் சமாதான முறையிலேயே பெற்றுத் தர வேண்டும் எனக் கண்ண பெருமானிடம் கேட்டுக் கொள்கிறார்.

பஞ்சபாண்டவரில் நால்வர் போரினால் நாடு கொள்வதை விரும்ப, தருமர் மட்டும் ஏன் சமாதான முறையால் நாடு கொள்வதை விரும்புகிறார்? அவர் ஒரு கோழையோ? என்ற ஐயம் பலருக்கு உண்டாகக் கூடும்.

அவர் கோழையல்ல. பீமனுக்கும் அர்ச்சுனனுக்கும் எவ்விதத்திலும் சளைத்ததல்ல அவருடைய வீரம் என்பது, பாரதப்போர் நடைபெறும் சமயத்தில் அனைவருமே காணப்போவதுதான்.

அவர் பொறுமையின் மறு வடிவமானவர்; அருளே வடிவமானவர், ஆகவேதான் அவர் மதித்து வணங்கும் வீடுமர், திருதராட்டிரர், விதுரர், துரோணர் முதலான பெரியவர்களையும், உறவினர் களையும், தம்குலத்தில் பிறந்த துரியோதனர் முதலான தம்பிகளையும் கொன்று அரசுரிமை கொள்வதை அவர் விரும்பவில்லை, ஆகவேதான் அருள் வெள்ளம் பெருகக் கண்ணனிடம் இவ்வாறு கேட்டு கொள்கிறார்.

"முந்தூர் வெம்பணிக் கொடியோன்
மூதூரில் நடந்துழவர் முன்றில்தோறும்
நந்தூரும் புனல்நாட்டின் திறம்வேண்டு
நாடொன்று நல்கான் ஆகில்
ஐந்தூர்வேண்டு, அவைஇல்லெனில்
ஐந்நிலம் வேண்டு; அவைமறுத்தால்
அடுபோர் வேண்டு;
சிந்துரத் திலகநுதற் சிந்துரத்தின்
மருப்பொசித்த செங்கண்மாலே"

(கிருட்டிணன் தூது.,11)

"அன்றைக்குக் கம்சன் ஏவிய குவலயாபீட மென்னும் யானையின் தந்தத்தை ஒடித்து வென்றவர் ஆகியதிருமாலே! சிந்தூரப் பொட்டு எப்போதும் திகழும் நெற்றியை யுடையவராகிய திருமாலே!" என்பதாக அவரை அழைத்து பெருமைப் படுத்தும் தருமர், கண்ண பெருமானைத் துரியோதனனிடத்தில் தூதாகப் போய் தமக்கு உரிமையுடைய நாட்டைத் தருமாறு கேட்கச் சொல்லுகிறார், துரியோதனன் நாடு தர மறுத்து விட்டால், ஐவருக்கு ஐந்து வீடுகளையேனும் தரவேண்டுகிறார்.

"அதுவும் தராவிட்டால் போரை வேண்டு! கண்ணா! " என்று போரைத் தருமர் அரைகுறையாக வேண்ட, அதுவரையிலும் அடக்கமுடியாத கோபத்தை அடக்கிக் கொண்டிருந்த வீமன், அதற்குமேல் பொறுக்க முடியாமல் பொங்கி எழுகிறான்.

கோபத்தில் வீமனின் உதடுகள் துடிக்கின்றன! கண்ணபெருமானை நோக்கி "ஞாலமெல்லாம் பூத்தோனே! பூந்தவிசிற் பூவைபுணர் மணிமார்பா! புன்மையாவும் தீர்த்தோனே" என்பதாகப் புகழ்ந்து "ஊனமிலான் மானமிலா துரைப்பதற் கென் செய்வேன்" என்று ஆத்திரமாகச் சொல்லுகிறான்.

அண்ணன் தருமன் மேல் வீமனுக்கும் மற்ற தம்பிகளுக்கும் மதிப்பு மிகுதி.

அவருடைய கட்டளையின்படிதான் பாஞ்சாலியின் துகிலை உரிந்து துரியோதனன் கேவலப்படுத்திய போதும் கூட பொறுமை காட்டி, தருமருக்கு வாய்த்த தம்பிகள்போல் தாரணியில் பிறருக்கு வாய்க்குமோ என்று பலரும் புகழுமாறு தருமருக்குப் பெருமைகூட்டினார்கள்.

ஆனால் இப்போது இனியும் பொறுக்க முடியாது என்ற நிலைக்கு வந்து, தம்பிகளில் வீமன் முதலில் எழுந்து "ஊனமிலான் மானமிலா துரைப்பதற்கென் செய்வேன்" என்று ஆத்திரமாகக் கூறுகின்றான். அப்போதும் அண்ணன் தருமன் குற்றமற்றவன் தான் என்பதாக

சிவபிரான் எட்டு வீரச் செயல்கள் புரிந்த திருத்தலங்கள்

1. திருக்கண்டியூர்
2. திருக்கோவிலூர்
3. திருவதிகை
4. திருப்பறியலூர்
5. திருவிற்குடி
6. திருவழுவூர்
7. திருக்குறுக்கை
8. திருக்கடவூர்

'ஊனமிலான்' என்று வீமன் உரைப்பது குறிப்பிடத்தக்கது.

கண்ணனை நோக்கிப் பேசிய வீமன் இப்போது தம் அண்ணனையே நோக்கிப் பேசுகிறான். "அன்றைக்குப் பாஞ்சாலியின் துகிலைப் பலரறிய பாவி துச்சாதனன் களைந்து அவமானப்படுத்திய போது "வேண்டாம் கோபம்! பொறுமை

பொறுமை" என்றுகூறி எங்களை எல்லாம் தடுத்து உலகுள்ளளவும் மாறாத பழியை உனக்கும், எங்களுக்கும் உண்டு பண்ணி விட்டாய்! *13* ஆண்டுக் காலம் கொடிய வன வாழ்க்கை வாழ்ந்துவிட்ட பிறகும்கூட வஞ்சம் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற நினைவே இல்லை உனக்கு! நமக்கு உரிமை உடைய நாடு மட்டுமல்ல., துரியோதனனுடைய நாட்டையும் நொடியில் வென்று நானுனக்குத் தருகிறேன், "பாவம் துரியோதனன்! நாடின்றி என்ன செய்வான் என்று வருத்தப்படுகிறாயா? வருத்தம் கொள்ளாதே! அவனைக் கொன்று வானுலகத்தை அவன் ஆளுமாறு அவனை அனுப்பி வைத்து விடுகிறேன்! சொல் ஒரு வார்த்தை" என்று வீமன் தருமனை வேண்ட, அப்போதும் தருமன் பொறுமையே பூண்டவனாகி, "குற்றமது பார்க்குங்கால் சுற்றமில்லை., கண்மலரில் கைபடாதோ., அன்றைக்கு ஏதோ கோபத்தில் சொன்னதை வஞ்சினம் என்பதாக நெஞ்சத்தில் வைத்துக் கொள்ளலாமா?" என்று வீமனுக்கு அறிவுரைகள் கூறுகின்றான்., அப்போது வீமன், "அரவுயர்த்தோன் கொடுமையினும் முரசுயர்த்தோய் உனதருளுக்கு அஞ்சினேன்" என்பதாகக் கூறுகிறான். பாம்புக் கொடி கொண்டவன் துரியோதனன். முரசத்தைக் கொடியாகக் கொண்டவன் தருமன், துரியோதனன் புரிந்த கொடுமைகளை எல்லாம் பொறுத்துக் கொண்டு விடலாம்., ஆனால் தருமனே! உன்னுடைய எல்லை கடந்த பொறுமையைப் பொறுத்துக்கொள்வது ஆகாது என்பதே வீமன் வாக்கில் உள்ள கருத்தாகும்.

அப்பொழுது கண்ணபெருமான் "முன் பிறந்த அண்ணன், அரச தருமத்தை எடுத்துரைத்தால் அது கேளாமல் அடம் பிடித்தல் ஆகாது." என்பதாகக் கூறி, வீமனைக் கோபம் கொள்ள வேண்டாமென வேண்டி, அமரச்செய்கிறார்.

அப்போது அர்ச்சுனன் எழுந்து தன் கருத்தைக் கூறுகிறான். "கண்ணா! நீ தூது போனாலும், அண்ணன் தருமன் கருத்தின்படி நீநாடு கேட்டுப் பின் ஊர்கேட்டு, வீடுகேட்டாலும் கூட அறிவற்றவனாகிய துரியோதனன் இணங்க மாட்டான். உவர் நிலத்தில் நெல் விளையாது. நாகப் பாம்பிற்கு அமிர்தத்தை அருந்தக் கொடுத்தாலும் அது நஞ்சைக் கொடுக்குமே தவிர, நல்லதைச் செய்யாது! தேவர்கள் ஆனாலும், அசுரர்கள் ஆனாலும், இன்னும் சொல்லப்படுகிற எவரானாலும் எதிர்த்து வரட்டும். என்கையில் காண்டீபம் இருக்கிறது. தொலைத்துவிடுகிறேன்."

அர்ச்சுனன் இப்படி கூறி முடித்தவுடன் நகுலனும் எழுந்து, "தருமம் தருமம் என்று சொல்லிக் கொண்டே இருக்கிறார் தருமர் ஆகிய எங்கள் அண்ணா! அரச தருமத்திலே ஆண்மையும் ஒன்றல்லவா! நாம் துரியோதனனிடத்தில் நாடும், ஊரும், வீடுமாகக் கெஞ்சி வீணே காலத்தைக் கடத்தி உலகத்தார் பழிச் சொல்லுக்கு ஆளாவதைவிட தோள் வலிமையால் வென்று நாடாள்வதேசரி. 13 ஆண்டுக்காலம் கஷ்டப்பட்டுவிட்ட தம் உடன்பிறந்தார்களாகிய பாண்டவர்களுக்கு அவர்களுடைய நாட்டைக் கொடுத்து விடுவோம் என்று, தானே உணராத துரியோதனன், கண்ணா! நீ தூதுபோய் உரைப்பதனாலா உணரப்போகிறான்" என்ற தன் கருத்தைத் தெரிவித்து அமர, கண்ண பெருமான் சகாதேவனுடைய கருத்தைக் கூறுமாறு கேட்கிறார்.

"எல்லோரையும் போலத் தன் கருத்தை எளிதாகச் சொல்லிமுடித்து விடவில்லை சகாதேவன். ஆருடக்கலையோடு ஆண்டவனின் தத்துவ உண்மைகளையும் தெளிந்தவனாகிய சகாதேவன் எழுந்து 'கண்ணா! தருமன் உரைத்தவாறு நீ தூது போனாலும் போகாமல் இருந்தாலும் என்ன? துரியோதனன் நாடு கொடுத்தாலும் கொடுக்காமல் போனாலும் என்ன? பாஞ்சாலி கூந்தல் முடித்தாலும் முடிக்காவிட்டாலும் எனக்கென்ன! நான் கருத்து சொல்ல, அந்தக் கருத்தின்படிதான் எல்லாம் நடக்க இருக்கிறதா என்ன? உன் திருவுளத்தில் நீ என்ன நினைத்திருக்கிறாய் என்பது எனக்குத் தெரியும். அந்தக் கருத்தே எனக்கும் கருத்துமாகும்."

இப்படி சகாதேவன் சூழ்ச்சி வல்ல கண்ணனிடம், சூழ்ச்சியாகவே தன் கருத்தையும் சொல்ல, கண்ணனும் அவனைமட்டும் தனியொரு இடத்திற்கு அழைத்துப் போய், "என்ன நான் திருவுளத்தில் நினைத்திருக்கிறேன்! எல்லாம் எனக்குத் தெரியும் என்கிறாயே! சொல்" நான் என்ன நினைத்திருக்கிறேன் என்று கேட்கின்றார் சகாதேவன், கண்ணனின் மனக்கருத்தை

"நீபாரதஅமரில் யாவரையும் நீறாக்கிப்
பூபாரம் தீர்க்கப் புரிந்தாய்

குசேலன் குபேரன் ஆனநாள்

குசேலன் குபேரன் ஆனநாள் 'அட்சய திருதியை' நாள் ஆகும்.

சித்திரை அமாவாசைக்கு அடுத்த மூன்றாம் நாள் அட்சய திருதியை நாளாகும். இந்நாளில் தொட்டதெல்லாம் துலங்கும் என்பதால் இந்நன்னாளில் பொன்னாபரணம் வாங்கும் வழக்கம் மக்களிடம் மிகுந்து வருகிறது.

புயல்வண்ணா
கோபாலா! போரேறே! கோவிந்தா! நீயன்றி
மாபா ரதமகற்ற மற்றார்கொல் வல்லாரே"
என்று கூறுகின்றான்.

"பாரதப் போரை நடத்துவதற்கென்றே நீ அவதரித்திருக்க, நடக்க இருக்கும் போரைத் தடுக்க வல்லவர் யார்? அர்ச்சுனனைக் கொன்று, பாஞ்சாலியின் கூந்தலையும் அரிந்து, உன்னையும் அங்கிங்கு நகராதபடி கட்டிப்போட்டுவிட்டால், நடக்க இருக்கும் போரைத் தடுத்துவிடலாம்" என்று மேலும் சகாதேவன் வினயமாகக் கூறுகின்றான். கண்ணனும், "சகாதேவா! நீ சொல்லியதைப் போல் போருக்குக் கராணமாக இருக்கின்ற அர்ச்சுனனைக் கொல்வதும், பாஞ்சாலியின் கூந்தலை அரிந்து விடுவதும் கூட சாத்தியமாகலாம். ஆனால் என்னைக் கட்டுவது உனக்குச் சாத்தியம் ஆகுமோ?" என்று கேட்டபடியே பதினாறாயிரம் உருவங்கள் எடுத்து, அங்கிங்கெனாதபடி எல்லா இடத்திலும் வியாபித்து நிற்கின்றார்.

ஆண்டவன் அன்பெனும் பிடியில் அகப்படுபவன் தானே! சகாதேவனும் அன்பால் திருமாலை வணங்கி

அப்பதினாயிரம் உருவங்களுக்கும் மூலமான உருவத்தை அன்பினால் தியானித்து தன்மனமாகிய கயிற்றினால் கட்டி விட, பூதேவரும் மாதேவரும் தேடிக் காணா மலரடியோனாகிய கண்ணன் "சகாதேவா! உன் ஆற்றலை நான் அறிவேன், உலகத்தவர்க்கும் உன் ஆற்றலைத் தெரிவிக்கவே, என்னைக் கட்டுதல் உனக்கு ஆமோ என்று கேட்டுக் கட்ட வைத்தேன், கட்டினை அவிழ்த்துவிடு" என்று கேட்டுக் கொள்கிறார்.

அப்போது சகாதேவனும் "நான் வேண்டும் இந்த வரத்தைத் தந்தால்தான் கட்டவிழ்த்து விடுவேன்" என்று கூறி, "பாரதப் போரில் பாண்டவர் ஐவரையும் "கண்ணா, நீ உன் அருட்பார்வையால் ஒரு ஊறும் நேராவண்ணம் காக்க வேண்டும்" என வேண்டிக் கொள்கிறோன்.

"அன்பாலின் றென்னை யறிந்தே பிணித்தனை
நன்று
என்பா தந்தன்னை இனிவிடுக என்று
உரைப்ப
வன்பார தப்போரில் வந்தடைந்தேம்
ஐவரையும்
நின்பார்வை யாற்காக்க வேண்டும்
நெடுமாலே"

(கிருட்டிணன் தூது, 39)

என்ற இப்பாடல் சகாதேவன் தம் அண்ணன் மார்கள் மேல் கொண்டுள்ள பாசத்தைப் புலப்படுத்தி நம் கண்களில் நீரை வரவழைக்கும்.

கண்ணனும் அவ்வாறே காப்பதாக வரம் அளித்துச் சகாதேவனிடம் அங்கு அந்தத்தனியிடத்தில் அவர்கள் பேசிக் கொண்டதையும், நடந்த நிகழ்ச்சிகளையும் பிறருக்கு அறிவிக்க வேண்டாமென ஆணையிட்டு, ஆலோசனை நடக்கும் இடத்திற்கு அழைத்துவந்து "இப்போது உன் கருத்தைக் கூறு" எனக் கேட்டுக் கொள்கின்றார். அப்போது தருமருடன் அமர்ந்திருந்த பாஞ்சாலியை நோக்கிச் சகாதேவன் "எனக்கும் சமாதானமாகப் போவதுதான் சரியெனப் படுகிறது" என்கிறான்.

கண்ணனிடத்தில் தனியாகப் பேசிய போது, போரே கண்ணனின் எண்ணமாவதைத் தெரிவித்துப் போரில் ஐவரையும் காத்தல் வேண்டும் எனக் கேட்டுக்கொண்டவனாகிய சகாதேவன், பாஞ்சாலியிடத்தில் "நான் சமாதானமே விரும்புகிறேன்" என்று கூறுவது வேடிக்கை அல்லவா! கண்ணபெருமானும் உடனே "தருமருக்கு சமாதானம் விருப்பம், சகாதேவனுக்கும் அதுவே விருப்பம். எனக்கும் சமாதானமாகப் போவதுதான் சரி என்று படுகிறது" என்று கூறுவது வேடிக்கையிலும் வேடிக்கை அல்லவா!

கண்ணனின் மனமாயை அறிய வல்லார் யார்? அதனால் தான் மாயை வல்லானின் மாயை அறியாத பாஞ்சாலி அழத் தொடங்குகிறாள்.

"சாலக்கனகன் தனிமைந்தனை முனிந்த
காலத்தவனறைந்த கற்றூணிடை வந்தாய்
மூலப்பேரிட்டழைத்த மும்மதமால் யானைக்கு
நீலக்கரிபோல் முன்னின்ற நெடுமாலே!

(கிருட்டிணன் தூது .,43)

"கற்றைக் குழல்பிடித்துக் கண்ணிலான்
பெற்றெடுத்தோன்
பற்றித் துகிலுரியப் பாண்டவரும்
பார்த்திருந்தார்
கொற்றத் தனித்திகிரி கோவிந்தா நீயன்றி
அற்றைக்கு என்மானம் ஆர்வேறு
காத்தாரே!"

(கிருட்டிணன் தூது, 44)

மன்றில் அழைத்தெனக்கு மாசளித்த
மன்னன்பாற்

திருமால் உறையும் நவதிருப்பதிகள்

1. ஸ்ரீ வைகுண்டம் - தூத்துக்குடி மாவட்டம்
2. ஆழ்வார் திருநகரி - தூத்துக்குடி மாவட்டம்
3. தென்திருப்பேரை - தூத்துக்குடிமாவட்டம்

4&5, தொலை வில்லிமங்கலம் (இரட்டைத் திருப்பதி) தூத்துக்குடி மாவட்டம்

6. திருக்குளந்தை - நெல்லை மாவட்டம்
7. புளியங்குடி - நெல்லை மாவட்டம்
8. திருக்கோளூர் - தூத்துக்குடி மாவட்டம்
9. வரகுணமங்கை - நெல்லை மாவட்டம்

சென்று தமக்கைந்தூர் திறல்வீரர்
பெற்றிருந்தால்
அன்று விரித்த வறுங்கூந்தல் வல்வினையேன்
என்று முடிப்பதினி எம்பெருமான் என்று
அழுதாள்"
(கிருட்டிணன் தூது 45)

'பிரகலாதனுக்கு அருள் புரிந்தாய், ஆதிமூலம் என்று அலறிய யானைக்கு அருள்புரிந்தாய்! அன்றைக்கு எனக்கு அவையறிய ஏற்பட்ட அவமானத்தின் போதும் கூட நீ தான் அருள்புரிந்து என்மானம் காத்தாய்! ஐந்து ஊரைக் கெஞ்சிக் கேட்டு அதுபோதும் என இவர்கள் எல்லாரும் இருந்துவிட்டால், என்றைக்கு என்னுடைய கூந்தலை நான் முடிப்பேன்?" என்று பாஞ்சாலி கண்ணனைக் கேட்டு அழ, கண்ணனின் தம்பியாகிய சாத்தகி "இது பொறுக்க முடியாது, இனி போர் ஒன்றே வழி" என்று கூறுகிறான்.

"திரௌபதியின் கூந்தலை அரிந்து விட்டால் போர் நடக்காமல் தடுத்துவிடலாம். அவிழ்ந்த அவள் கூந்தல் இருக்கும் வரை போரைத் தடுக்க முடியாது" எனச் சகாதேவன் முன்னம் கண்ணனிடம் தனி இடத்தில் உரைத்ததன் காரணம் இப்பொழுது புரிகிறதல்லவா!

ஆகவேதான் பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலே காரணமாகப் போர் நடப்பதை இனி யாராலும் தடுக்க முடியாது என்பதனாலும், பாஞ்சாலி அழுவதை இனியும் பார்த்துக்கொண்டிருத்தல் ஆகாது என்பதாலும் கண்ணபெருமான்

"தொல்லாண்மைப் பாண்டவர்க்குத் தூது
போய்
மீண்டதற்பின்
நல்லாயுன் பைங்கூந்தல் நானே
முடிக்கின்றேன்
எல்லாரும் காணஇனி விரிப்ப
தெண்ணரிய
புல்லார்தம் அந்தப்புர மாதரர் பூங்குழலே"
(கிருட்டிணன் தூது, 49)

என்று கூறி, அழாதே எனத் தேற்றுகிறார்.

போர்தான் வழி என்று கண்ணனே முடிவு செய்துவிட்ட பிறகு, துரியோதனன் இடத்தில் ஏன் கால்கள் நோகத் தூதுபோக வேண்டும்? இளங்கோவடிகள் தம் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில் கண்ணன் தூது போகிய சிறப்பினை ஆய்ச்சியர் குரவையிலே அமைத்து.

"மடந்தாழும் நெஞ்சத்துக் கஞ்சனார் வஞ்சம்
கடந்தானை நூற்றுவர்பால் நாற்றிசையும்
போற்றப்
படர்ந்து ஆரணம் முழங்கப் பஞ்சவர்க்குத்
தூது
நடந்தானை ஏத்தாத நாளென்ன நாவே
நாராயணா என்னா நாளென்ன நாவே"
என்று போற்றவா கண்ணன்
தூதுபோகிறார்?

கண்ணன் தூது தருமரின் விருப்பப்படி, சமாதானத்தால் நாடு பெறுவதற்காக அல்ல. கண்ணனின் எண்ணப்படி யாவரையும் நீறாக்கிப் பூபாரத்தைத் தீர்க்கும் பொருட்டுத் தான்! பாஞ்சாலியின் அவிழ்ந்த கூந்தலை அழகுபடுத்தி முடிந்து வைப்பதற்குத்தான்.

அதற்குக் கண்ணபெருமானின் தூது எப்படியெல்லாம் பயன்பட்டது என்பதை அடுத்த இதழில் காண்போம்.

...தொடரும்

சுயநலமில்லாதவனே உண்மையான பக்தன் :

படித்தவர் ஆயினும், பாமரர் ஆயினும் சுயநலம் அற்றவர்களே சிவ பெருமானின் திருவருளுக்குத் தகுதி படைத்தவர்கள் ஆவார்கள்.

அப்படியில்லாமல் ஒருவன் சுயநலம் மிக்கவன் ஆயிருப்பின், அவன் எல்லாக் கோயில்களுக்கும் சென்று சேத்ராடனம் செய்திருப்பினும், சிறுத்தை உடல் போலத் தன் உடம்பு எல்லாம் நீறுபூசித் திலகம் தீட்டித் திரியினும், அவன் சிவபெருமானை விட்டு வெகுதூரம் விலகி உள்ளவனே.

- சுவாமி விவேகானந்தர்

தோஷ நிவர்த்திக்கு நவகிரக கோயில்கள்



அருள்மிகு சுவேதாரண்யேசுவர சுவாமி திருக்கோயில்

திருவெண்காடு (புதன் ஸ்தலம்)

அமைவிடம் :

சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் சாலையில் உள்ளது. சீர்காழியில் இருந்து பூம்புகார் செல்லும் பேருந்திலும், மயிலாடுதுறையில் இருந்து பெருந்தோட்டம், நாங்கூர், மங்கைமடம், இளைய மதுகூடம் செல்லும் நகரப்பேருந்துகள் மூலமாகவும் இத்தலத்தை அடையலாம்.

இறைவன்	: சுவேதாரண்யேசுவரர், வெண் காட்டுநாதர்.
இறைவி	: பிரம்ம வித்தியாம்பிகை.
தலவிருட்சம்	: வடவால், கொன்றை, வில்வம்.
தீர்த்தம்	: அக்னி தீர்த்தம், சூரிய தீர்த்தம், சந்திர தீர்த்தம்.

பாடியவர்கள் :

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசகர், சேக்கிழார், கபிலதேவ நாயனார், பரணதேவ நாயனார்.

தலப்பெயர்கள் :

திருவெண்காடு, சுவே தாரண்யம், ஆதிசிதம்பரம், பேரரங்கம், மாவரங்கம், நவநிருத்தகண்டம், வேதரவண்காடு, சுக தவனம், வில்வதானம், தருமநாதபுரம், கணபதி நகரம், முருகன்பூண்டி, மாலூர், திருவூர், பெரியமயானம், ஞானவனம்.

தலப்பெருமை :

வால்மீகி இராமாயணத்தில் இத்தலம்பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. காசிக்கு சமமானதாகத்திகழும் ஆறுதலங்களில் ஒன்று. சமயகுரவர்கள் நால்வராலும் பாடப்பெற்ற தலம். 51 சக்தி பீடங்களில் இது ஒன்று. இங்குள்ள திரு மூர்த்திகள் மூன்று. தீர்த்தங்கள் மூன்று. தலவிருட்சம் மூன்று. பிரம்ம பீடம் இங்குள்ளது.

அகோரமூர்த்தி சன்னதி :

இத்தலத்தின் தனிச்சிறப்புக்குரியவர் அகோரசிவன். சிவ பரம்பொருளே அகோரமூர்த்தி ஆவார். சிவபெருமானின் 64 மூர்த்தி பேதங்களுள் அகோரமுர்த்தி 43வது மூர்த்தி ஆவார். இத்திருவுருவம் இத்தலத்தில் மட்டுமே உள்ளது.

பிள்ளை இடுக்கி அம்மன் :

திருஞானசம்பந்தர் திருவெண்காட்டின் வட எல்லைக்கு வந்தபோது அவருக்கு ஊரெல்லாம் சிவலோகமாகவும், மணலெல்லாம் சிவலிங்கமாகவும் தோன்றின; ஆதலின் இத்தலத்தை மிதித்தற்கஞ்சி "அம்மா" என்றழைத்தார். அதுகேட்டுப் பெரியநாயகி அம்மை அங்குத் தோன்றி ஆளுடைய பிள்ளையைத் தம் இடுப்பில் கோயிலுக்கு எடுத்து வந்தார். பிள்ளையை இடுப்பில் தாங்கிய வடிவில் உள்ள அம்பாளின் சிலை பிரம்மவித்தியாம்பிகை கோயிலின் மேற்கு உட்பிரகாரத்தில் உள்ளது.

புதன் தலம் :

ஒன்பது கிரகங்களில் ஒருவரான புதன் கல்வி, அறிவு, பேச்சுத்திறமை, இசை, சோதிடம், கணிதம், சிற்பம், மருத்துவம்,

மொழிகளில் புலமை ஆகியவற்றைத் தர வல்லவர். தாய்மாமனைப் பற்றி இவரைக் கொண்டு அறியலாம். அதனால் இவரை மாதுல காரகன் என்பர். கல்விக்குக் காரணமாக இவர் விளங்குவதால் வித்யாகாரகன் என்றும் இவரைக் கூறுவர் . இவருக்கு தனிக் கோயில் புதன் தலமாகிய திருவெண்காட்டில் உள்ளது.

வித்தையைத் தரும் இவருடைய சன்னதி,பிரம்ம வித்தியாம்பிகையின் இடது பாகத்தில் அமைந்திருப்பது பொருத்தமே. புதன் சன்னதிக்கு வடபால் பிரம்ம பீடம் அமைந்துள்ளது.புதனின் தந்தையான சந்திரனின் கோயிலும், சந்திர தீர்த்தமும், புதன் சன்னதிக்கு எதிரே அமைந்துள்ளது. இந்த விசேஷமான அமைப்புடைய புதன் சன்னதிக்கு வந்து வழிபாடு செய்தால் புதனால் பெறத்தக்க மேலே குறிப்பிடப்பட்டுள்ள கல்வி முதலான பேறுகளைப் பெறலாம். மேலும் அனுக்கிரகமான புதன் ஐந்தாம் இடச் சம்பந்தம் உடையவர்.

அருள்மிகு புதன்

வழிபட்டோர் : மெய்கண்டார், பட்டினத்தார், இந்திரன், சத்திய நல்விரதன், கணபதி, முருகன், மாதங்கி, மகாவிஷ்ணு, மகாலட்சுமி, இராமர், பிரம்மன், சூரியன், சந்திரன், அக்னி, அகத்தியர், நாரதர், வியாக்கிரபாதர், கிருஷ்ணர் முதலானவர்கள்.

திருக்கோயில் முகவரி:
செயல் அலுவலர்
அருள்மிகு சுவேதாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோயில், திருவெண்காடு *609 114.*
சீர்காழி வட்டம்,
நாகை மாவட்டம்.
தொலைபேசி : *04364-256424.*

விஷ்ணு

விஷ்ணு என்ற சொல்லுக்கு எங்கும் நிறைந்தவர் இரட்சகர் யாவையும் படைத்துக் காத்து வருபவர் என்பது பொருள் ஆகும்.

அவதாரம்

அவதாரம் என்றால் மேலிருந்து கீழ் இறங்கி அருள் செய்ய வருதல் என்பது பொருள்.

தசாவதாரம்

விஷ்ணு எடுத்த பத்து அவதாரங்கள், தசாவதாரம் எனப்படும்.

அஷ்ட பந்தன மருந்துகள்

1. செம்பரக்கு,
2. சுக்கான் தூள்
3. குங்கிலியம்
4. கற்காலி
5. செம்பஞ்சு
6. சாதிலிங்கம்
7. தேன்மெழுகு
8. எருமை வெண்ணை

இவைகள் சம விகிதத்தில் கலந்து இடித்து கெட்டிப் படுத்தப்பட்டுப் பயன்படுத்த உருவாக்கப்படும். இவை மருத்துவ குணமும் பூச்சிக் கொல்லிகளாகவும் பயன்படுகின்றது.

இவை ஆதார பீடத்துடன் இறை உருவங்களை ஆகம விதிகளின்படி பொருத்தி நிற்க பிடிமானப் பொருட்களாகப் பயன்படுகின்றது.

அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர் திருக்கோயில்

அமைவிடம் : கும்பகோணத்தில் இருந்து நீடாமங்கலம் செல்லும் வழித்தடத்தில் உள்ளது. கும்பகோணத்தில் இருந்து 17 கி. மீ. தொலைவில் உள்ளது.

தலப்பெயர்கள் : திருஇரும்பூளை, காசி ஆரண்யம், ஆலங்குடி.

இறைவன் : அருள்மிகு ஆபத்சகாயர், காசி ஆரண்யேஸ்வரர்

இறைவி : அருள்மிகு ஏலவார்குழலி அம்மை.

விசேட மூர்த்தி: அருள்மிகு குரு தெட்சிணா மூர்த்தி

தலவிருட்சம் : பூளைச்செடி

தீர்த்தம் : அமிர்தபுஷ்கரணி

பாடியவர்கள் : திருஞானசம்பந்தர், திருநாவுக் கரசர்

வழிபட்டோர் : சுந்தரர், ஆதிசங்கரர் , இந்திரன், சுவாகனன்

தலப்பெருமை :

தேவர்கள் அமுதம் கடைந்தபோது ஏற்பட்ட விஷத்தினால் அவதியுற்று, ஆண்டவனை வழிபட ஆலமாகிய விஷத்தை குடித்துக் காத்தமையால் இவ்வூருக்கு ஆலங்குடி எனவும், இறைவனுக்கு ஆபத்சகாயர் எனவும் பெயர் வழங்கப்படுகின்றது.

இந்த ஊரில் அரவு தீண்டி மரித்தவர் இல்லை. கஜமுகாசுரனால் தேவர்களுக்கு நேர்ந்த இடுக்கண்களைக் களைந்து காத்தமையால் இத்தல விநாயகருக்குக் "கலங்காமற் காத்த விநாயகர்." எனப்பெயர் உண்டாயிற்று.

அருள்மிகு குரு தட்சணமூர்த்தி

அம்மையார் தவம் செய்து இறைவனைத் திருமணம் செய்து கொண்ட சிறப்பை உடையது. அம்மை திருமணம் நடந்த இடத்திற்கு இன்று திருமணமங்கலம் எனப்பெயர் வழங்கப்படுகிறது. மத்தியார்ச்சுன மகாலிங்கப் பெருமானுக்குப் பரிவாரத்தலமாக உள்ளது. இத்தலத்தில் உள்ள குருமூர்த்தியை குருவாரத்தில் வணங்கி வழிபடுவோருக்கு அனைத்து வகை ஞானமும் எளிதில் கைகூடும்.

குருதோஷ நிவர்த்தி மற்றும் வழிபடும் முறை :

இத்திருக்கோயிலுக்கு 14 தலைமுறைகள் புண்ணிய பேறு பெற்றவர்களே வருகை தர இயலும். முதலில் கலங்காமற் காத்த விநாயகரை வணங்கிப் பின்னர் கொடிமரம் சென்று அங்குள்ள துவஜ கணபதியை வணங்கி நேராக சென்று சுவாமியை (ஆபத்சகாயேஸ்வரர்) தரிசித்து பின்னர் குரு தெட்சிணாமூர்த்தியை வணங்கி சங்கல்பம் செய்து அர்ச்சனை முதலியவைகளை முடித்து பிரகாரத்தில் உள்ள சோமாஸ்சுந்தர், முருகன் மகாலெட்சுமி, துர்க்கை, சண்டிகேஸ்வரர், நவக்கிரகங்கள், உற்சவர் குருமூர்த்தி முறையே வழிபட்டு ஏலவார் குழலி அம்மை மற்றும் சனிபகவானைத் தொழுது கொடி மரத்தருகில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தல் வேண்டும். பின்னர் குரு பரிகாரமாகிய இருபத்து நான்கு நெய் தீபங்களைத் தீபம் ஏற்றும் இடத்தில் ஏற்றித் திருக்கோயிலை மூன்று முறை வலம் வந்து ஒவ்வொரு முறையும் கொடிமரத்தின் கீழ் வீழ்ந்து வணங்கிப் பரிகாரத்தை நிறைவு செய்தல் வேண்டும்.

திருக்கோயில் முகவரி:
செயல் அலுவலர்,
அருள்மிகு ஆபத்சகாயேஸ்வரர்
திருக்கோயில்,
ஆலங்குடி 612801, வலங்கைமான் வட்டம்,
திருவாரூர் மாவட்டம்
தொலைபேசி எண் 04374-269407

சிவச் சின்னங்கள்

1. திருநீறு 2. உத்திராட்சம்

சிவ ஆகமங்கள் - 28

அருள்மிகு அக்னீஸ்வரசுவாமி திருக்கோயில்

கஞ்சனூர் (சுக்கிரன் ஸ்தலம்)

அமைவிடம் : கும்பகோணம் - மயிலாடுதுறை சாலையில் ஆடுதுறையில் இருந்து திருமங்கலக்குடி சூரியனார்கோயில் வழியாகவும், குத்தாலத்திலிருந்து கதிரா மங்கலம் வழியாகவும் வரலாம். சூரியனார்கோயிலிருந்து கிழக்கே 2 கி.மீ. தொலைவில் உள்ளது. பேருந்து வசதி உண்டு.

தலப் பெயர்கள் :
பலாசவனம், பராசரபுரம், பிரம்மபுரி, அக்கினீபுரம், கம்சபுரம், முக்திபுரி.

இறைவன் : அருள்மிகு அக்னீஸ்வரர்.

இறைவி : கற்பகாம்பிகை.

தலவிருட்சம்: பலாசமரம் (பொரசமரம்)

தீர்த்தம் : அக்கினிதீர்த்தம், சந்திர தீர்த்தம், கம்ச தீர்த்தம்.

பாடியவர் : திருநாவுக்கரசர்.

தலப் பெருமை : பராசரருக்கு சித்தப் பிரமை நீக்கியதும், அக்கினிக்கு உண்டான சோகை நோயைத் தீர்த்ததும், சந்திரனுக்கு சாபம் நீக்கியதும், மானக்கஞ்சாற நாயனார் அவதரித்து வழிபட்ட தலமுமாகும். பஞ்சாட்சர மகிமையை வெளிப்படுத்திய ஹரதத்த சிவாச்சாரியார் அவதரித்த தலமுமாகும்.

தலச் சிறப்பு :
இத்திருத்தலத்தில் உள்ள நடராசர் சிலையில் நடராசர் மூலத் திருமேனியில் சிவகாமி (சிலாருபமாக) இருப்பது தனிச்சிறப்பும், அழகும் வாய்ந்தது. இம்மூர்த்தி பராசரருக்குத் தாண்டவக் காட்சி அளித்தவர். இத்தாண்டவம் முக்தி தாண்டவம் என்று அழைக்கப்படுகிறது. பிராமணர் ஒருவரின் பசுத்தோஷம் நீங்கியதை நிரூபிக்க இங்குள்ள கல்நந்தி புல் சாப்பிட்டதாகக் கூறப்படுகிறது.

சுக்கிரன் :
செல்வத்துக்கு அதிபதி, வீடு வாகனம், வாங்கவும், தம்பதிகள், ஒற்றுமையாக வாழ்வதில் ஏற்படும் தடைகள் நீங்கவும், ஜாதகத்தில் சுக்கிர தோஷம் நீங்கவும் இத்தலத்தில் உள்ள சுக்கிரனுக்கு 5 வெள்ளிக்கிழமைகள் அர்ச்சனை செய்து, பரணி, பூரம், பூராடம் நட்சத்திரத்தில் வழிபாடு செய்தால் சுக்கிரனால் ஏற்படக் கூடிய அனைத்து நலன்களும் உண்டாகும்.

திருக்கோயில் முகவரி :
செயல் அலுவலர்,
அருள்மிகு அக்னீஸ்வரர் திருக்கோயில்
கஞ்சனூர் அஞ்சல், துகிலி (வழி),
திருவிடைமருதூர் வட்டம்.
தஞ்சை மாவட்டம். தொ. பேசி.:0435-2473737.

அடுத்த இதழில் நிறைவுபெறும்

பஞ்ச சபைகள்

1. சித்திரை சபை	-	திருக்குற்றாலம்
2. பொற்சபை	-	சிதம்பரம்
3. வெள்ளி சபை	-	மதுரை
4. இரத்தின சபை	-	திருவாலங்காடு
5. தாமிர சபை	-	திருநெல்வேலி

புன்னைவனங்கள் நிறைந்த இடத்தில், மயில் வடிவில் வந்து உமையம்மையார் சிவ பெருமானைப் பூஜை செய்த இடம் என்பதால் மயிலைக்கு மயிலாப்பூர் என்ற பெயர் வழங்குகிறது என்பதைத் தலபுராணம் கூறுகிறது.

நாயன்மார்களும், ஆழ்வார்களும் போற்றியுள்ளனர். திருஞானசம்பந்தர் தம் திருப்பதிகம் ஒன்றால் என்பைப் பெண்ணாக்கிய அற்புதம் நடைபெற்றதும் இத்திருமயிலையில் தான்.

அறுபத்து மூவர் திருவிழா

புன்னாகவனத் தெழில்சேர்.
"கயிலைமலையுமை மயிலாய்ப் பூசை செய்ய
நன்னாமத்தான் மயிலையென விளங்குமூதூர்"

என்று அமிர்தலிங்கத் தம்பிரான் தாம் இயற்றிய திருமயிலைத் தலபுராணத்தில் திருமயிலையின் பெயர்க் காரணத்தை விளக்குகின்றார்.

1300 ஆண்டுகளுக்கு முன்பே அழகிய மாடவீதிகளைக் கொண்ட மலிவிழா மூதூராக திருமயிலை திகழ்ந்த சிறப்பை

பன்னு தொல்புகழ்த் திருமயிலாபுரிப் பதியில் மன்னுசீர்ப் பெருவணிகராக சிவநேச செட்டியார் தோன்றி, சிவ வழிபாட்டாலும், சிவனடியார் வழிபாட்டாலும் சிறப்புற்று விளங்கினார்.

"ஆறு சூடிய முடியினார் அடியவர்க் கன்பால்
ஈறிலாத பூனைசனைகள் யாவையும்
மிகச்செய்து
மாறிலா மறையவர்க்கு வேண்டின எலாம்
அளித்துப்

பேறு மற்றிதுவே எனும் பெருங்களி சிறந்தார்'

என்று சிவநேசரைச் செந்தமிழால் போற்றுகிறார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

சிவ பயனாக சிவநேசருக்குத் திருமகள் போன்ற எழிலுடன் ஒரு பெண்மகவு பிறக்கின்றது. "பூம்பாவை" எனும் பெயரிட்டு சீரோடும் சிறப்போடும் வளர்க்க, அக்குழந்தையும் ஏழாண்டு அடைகின்றாள்.

நாளும் இன்னிசையால் தமிழ் வளர்க்கும் ஞானசம்பந்தரின் சைவப் பொற்பணிகளைக் கேட்டுக் கேட்டு, அவருடைய பரமபக்தராகிப் போன சிவநேசர், திருஞானசம்பந்தருக்கே தம்மகள் பூம்பாவையை மணமுடித்துக் கொடுக்க தம்உள்ளத்தில் பேராசையை வளர்த்துக் கொண்டுவிடுகிறார்.

"கற்ற மாந்தர் வாழ் காழிநாடு
உடையவர்க் கடியேன்
பெற்றெ டுத்தபூம் பாவையும்
பிறங்கிய நிதியும்
முற்றும் என்னையும் கொடுத்தனன்"

என்று காணும்எவரிடமும் சொல்லிச் சொல்லிப் பூரித்துப் போவாராம் சிவநேசர்.

ஒருநாள் பூ பறிக்கும்போது பூம்பாவையைப் பாம்பு தீண்டி விடுகின்றது. தீயிடைப்பட்ட பூ மாலை போல பூநாகம் தீண்டிய பூம்பாவை விஷமேறித் துடிக்கின்றாள். மயங்கித் தரையில் சாய்கின்றாள், மயிலையில் வதியும் அத்தனை மருத்துவர்களையும் வரவழைத்து வைத்தியம் பார்க்கிறார் சிவநேசர்.

"வையகத்துள்ளோர் இந்த வெவ்விடம் ஒழிப்பவர்க்கு ஈகுவன் அந்தமில் நிதிக்குவை" என்று பறையும் அறைவிக்கின்றார்.

சிவநேசர் விஷம் தீண்டி மாண்டு போன பூம்பாவையை எரியூட்டாமல் மூன்று நாள் வரை வைத்திருந்து மருத்துவத் துறையில் தலைசிறந்து விளங்கிய மருத்துவ வல்லுநர்கள் அனைவரையும் வரவழைத்துப் பார்த்தும் பயனில்லாமல் போய்விடவே இறுதியில் வேறுவழியின்றி பூம்பாவையின் உடலைத் தகனம் செய்கின்றார் சிவநேசர்.

"உடைய பிள்ளையார்க்கு என இவள்தனை
உரைத்ததனால்
அடைவு துன்புறுவதற்கு இலையாம்."

என்று மனம் தேறுகிறார் சிவநேசர்;

'திருஞான சம்பந்தருக்கு அர்ப்பணிந்து இருந்த பூம்பாவை இறந்து போனாள்; இதில் நான் கவலை அடைய ஒன்றுமில்லை; இருந்தாலும் திருஞானசம்பந்தர் வரும் போது அவரிடம் காட்டுவதற்காக பூம்பாவையின் அஸ்தியை (எலும்பும் சாம்பலும்) ஒரு குடத்தில் சேமித்து வைப்பேன்" என்று எண்ணி சிவநேசர் அவ்வண்ணமே செய்கிறார். அஸ்திக் குடத்தைப் பொன்முத்து அணிகலன்களாலும், பூந்துகிலாலும் அலங்கரித்து கன்னிமாடத்தில் பாதுகாப்பாக வைத்து பூசைகள் செய்து வருகிறார்.

இவ்வாறு 5 ஆண்டுகள் கழியும்போது ஒருநாள் திருஞான சம்பந்தர் திருவொற்றியூரிலிருந்து புறப்பட்டுத்

திருமயிலைக்கு வரவிருக்கிறார் என்பதை அறிந்து களிபேருவகை கொள்கின்றார் சிவநேசர்.

திருஞானசம்பந்தரின் வரவை அறிவித்த அடியார்க்குப் பொன்னையும் பொருளையும் வாரி வழங்கி, திருஞான சம்பந்தர் வரும் சாலை வழியெங்கும், நடைக் காவணம் (இரத்தினக் கம்பளம்) விரித்து வரவேற்கின்றார் சிவநேசர்; வீதியெங்கும் மகரத் தோரணம், வாழை, பாக்கு மரங்கள் கட்டி வைத்து மங்கல வாத்தியங்கள் முழங்க, ஆங்காங்கே அன்னதான மண்டபங்களும் அமைத்து ஏக தடபுடலாக முத்தமிழ் விரகர் திருஞானசம்பந்தரை வரவேற்கின்றார் சிவநேசர்.

"ஆறுசூடினார் திருமகனார் அணைந்தார்" என்று எங்கும் பேராரவாரம் எழுகின்றது. முத்துப் பல்லக்கிலிருந்து இறங்கித் தொண்டர்கள் புடைசூழ, மயிலாபுரி திருநகர் வந்து சேரும் திருஞானசம்பந்தர், கபாலீச்சுரம் வந்து சேர்ந்து, துங்கநீள்சுடர்க் கோபுரம் தொழுது, கோவிலுக்குள் புக்கு அருளி, மங்கைபங்கர் தம் கோயிலை வலங்கொண்டு வணங்கிச் செங்கைகளைத், தலைக்கு மேற் குவித்துட கபாலீசுவரர் சந்நிதிக்கு வந்து சேருகிறார்.

"தேவ தேவனைத் திருக்கபாலீச்சரத்துஅமுதைப் பாவைப் பகனை பரிவுறு பண்பினாற் பரவி மேவு காதலின் விரும்பிய விரைவினால் விழுந்து நாவின் வாய்மையிற் போற்றினார் ஞானசம்பந்தர்."

என்று திருஞானசம்பந்தர் வழிபட்ட திருக்காட்சியை இன்றும் நம் கண்கள் கண்டுகளித்திடுமாறு கவிதைச் சித்திரமாகக் காட்டுகின்றார் சேக்கிழார் பெருமான்.

கபாலீச்சரத்தமுதை வழிபட்டுத் திருஞான சம்பந்தர், சந்நிதிக்கு வெளியே வரும்போது தான், அவரிடம் அடியவர்கள் சிவநேசரைப் பற்றியும் பூம்பாவையின் அஸ்திக் குடத்தைப் பற்றியும் தெரிவிக்கி றார்கள்.

"அருமையாற் பெருமகள் என்பு நிறைந்த அக்குடத்தை கோயில் திருமதிற்புறம் கொணர்க' என்று திருவாய் மலர்கிறார் திருஞானசம்பந்தர்.

பெருமகிழ்ச்சியுடன் திருஞான சம்பந்தரின் திருவடிகளைப் பலமுறையும் விழுந்து வணங்கிய சிவநேசர், அவர் உரைத்தவாறே மூடுபல்லக்கில் வைத்து அஸ்திக்குடத்தைக் கோயிலின் மேற்கு வாயிலுக்கு வெளிப்புறமாகக் கொண்டு வந்து சேர்க்கிறார். அஸ்திக்குடம் பல்லக்கிலிருந்து எடுத்து வெளியே வைக்கப்படுகிறது.

மாடம் ஓங்கிய மயிலை மாநகர் மக்கள் மட்டுமின்றி இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட மற்ற மற்ற ஊரில் வாழும் மக்களும், பிற சமணசமயத்தைச் சார்ந்த வரும் என்ன அதிசயம் நிகழுமோ என்பதைக் காண, கோயிலின் மேற்குவாயிலருகே வந்து கடலெனத் திரண்டு விடுகின்றனர்.

திருஞான சம்பந்தர் "மட்டிட்ட புன்னையங் கானல்" எனத் தொடங்கும் திருப்பதிகம் பாடத் தொடங்குகின்றார்.

"பல்கணத்தார்க்கு அட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்" "ஐப்பசி ஓணவிழா காணாதே போதியோ பூம்பாவாய்" "கார்த்திகை விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்" "ஆதிரைநாள் காணாதே போதியோ பூம்பாவாய்" "தைப்பூசம் காணாதே போதியோ பூம்பாவாய்" "மாசிக் கடலாட்டுக் காணாதே போதியோ பூம்பாவாய்" "பெருஞ்சாந்தி காணாதே போதியோ பூம்பாவாய்" என்று மயிலையின் புகழ் பெற்ற திருவிழாக்களைக் காணாமலே பூம்பாவை வானகம் போகலாமா எனக் கேட்டு

திருக்கோயில்

திங்கள் இதழ்



சந்தா விவரம்

தனி இதழின் விலை	- ரூ	10/-
ஓராண்டுச் சந்தா	- ரூ	120/-
பத்து ஆண்டுச் சந்தா	- ரூ	1000/-
ஆயுட்காலச் சந்தா	- ரூ	1500/-

(ஆயுட்காலம் என்பது அதிகபட்சமாக 15 ஆண்டுகள் மட்டும்)

விளம்பரக் கட்டண விவரம்

1.	முன் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 12,000/-
2.	பின் பக்க அட்டை உள்புறம் (வண்ணத்தில்)	ரூ. 10,000/-
3.	உள்புறம் முழுப்பக்கம்	ரூ. 5,000/-
4.	உள்புறம் அரைப்பக்கம்	ரூ. 3,000/-

இதற்கான பண விடை / வங்கி வரைவோலையை ஆணையர், இந்துசமய அறநிலைய ஆட்சித்துறை சென்னை-34 என்ற பதவிப் பெயரில் அனுப்பவும்.

திருஞானசம்பந்தர் பாடுகின்றார். திருஞானசம்பந்தர் பாடப்பாட, அஸ்திக் குடத்திலிருந்து எலும்பும் சாம்பலும் திருஞானசம்பந்தர் வாக்கே அமுதமாகி, ஏழாண்டில் மறைந்த பூம்பாவை இப்போது பன்னிரண்டு ஆண்டில் என்ன வடிவ வளர்ச்சியோடு விளங்குவாளோ அத்தகைய அற்புத வளர்ச்சியெல்லாம் ஒருங்கு பெற்று, பதிகத்தின் பத்தாம் பாடலைப் பாடிய போது தாமரை மொட்டு மலர்வதைப் போல குடம் உடைந்திட, தன் கோற்றொடிச் செங்கை முன் தோன்றிட, அழகினுக்கு அணியாக திருமகளே வந்து தோன்றியதைப்போல தோன்ற, "அரகர" எனும் அடியவர்களின் வாழ்த்தொலி வானத்தைப் போய் தாக்குகின்றது என்று வர்ணிக்கிறார் தெய்வச் சேக்கிழார் பெருமான்.

"தேவரும் முனிவர் தாமும்
திருவருட் சிறப்பு நோக்கிப்
பூவரு விரைகொள் மாரி
பொழிந்தனர் ஒழிந்த மண்ணோர்
யாவரும் இருந்த வண்ணம்
எம்பிரான் கருணை என்றே
மேவிய கைகள் உச்சி
மேற்குவித் திறைஞ்சி வீழ்ந்தார்"
(பெரிய புராணம்)

கற்பகத்தின் பூங்கொம்போ எனத் தோன்றிய பூம்பாவையைத் திருமணம் கொள்ள வேண்டுமென திருஞான சம்பந்தரை வேண்டுகிறார் சிவநேசர்; 'கண்ணுதலார் கருணையால் யான் உற்பவித்த பூம்பாவை என் மகளே யாவாள்" என்று கூறியருளும் திருஞானசம்பந்தர் பூம்பாவையை கன்னிமாடத்தே வீற்றிருந்து சைவ சமயத் திருப்பணிகள் ஆற்றி வரத்திருவருள் புரிகின்றார்கள்.

இத்தகைய அற்புதம் நடைபெற்ற மயிலையம் பதியில் ஆண்டுதோறும் நடைபெறும் பங்குனிப் பெருவிழாவின் எட்டாம் நாள் அன்று அங்கம் பூம்பாவை உயிர்பெறும் திருவிழாவும், அறுபத்து மூவர் திருவிழாவும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது.

"வையம் நீடுக மாமழை மன்னுக
மெய்யை விரும்பிய அன்பர் விளங்குக
சைவ நன்னெறி தாம்தழைத் தோங்குக
தெய்வ வெண்திரு நீறு சிறக்கவே."

இவ்வாண்டு அறுபத்து மூவர்விழா 3.4.04 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. பல்லாயிரக் கணக்கானோர் விழாவில் கலந்து கொண்டு மண்ணில் பிறந்த பெரும்பயனைக் கண்டார்கள்.

விலங்குகளும் பறவைகளும் வழிபாடு செய்த திருத்தலங்கள்

கழுகுகள் வழிபட்ட தலம் - திருக்கழுக்குன்றம். சம்பாதி, சடாயு ஆகிய பறவைகள் வழிபட்டதலம் - புள்ளிருக்கு வேளூர்.

சிலந்தியும் யானையும் வழிபட்டதலம் - திருவானைக்கா

யானை, பாம்பு , சிலந்தி இம்மூன்றும் வழிபட்டதலம் - திருக்காளத்தி

பாம்புகள் வழிபட்ட தலங்கள் - நாகப்பட்டினம், நாகேச்சுரம், திருப்பாம்புரம்

மயில் வழிபட்டதலம் - மயிலாடுதுறை, மயிலாப்பூர்

பசுக்கள் வழிபட்டதலம் - திருஆமாத்தூர்

எறும்புகள் வழிபட்டதலம் - திருவெறும்பியூர்

வாலி வழிபட்டதலம் - வடகுரங்காடு துறை குரங்கு, அணில், காகம் இம்மூன்றும் வழிபட்டதலம் - திருக்குரங்கு அணில் முட்டம்,

கேள்வி- பதில்

ஜெ. சாந்திபிரியா, சென்னை - 15.

கேள்வி : ஆண்டவனை வணங்கி வழிபட்ட பிறகு ஆலயத்தில் சிறிதுநேரம் அமர்ந்து வரவேண்டும் என்று பெரிய வர்கள் சொல்லுகிறார்கள். அதற்கு என்ன காரணம் என்று கூற முடியுமா?

பதில் : ஆலயங்களில் ஏழு சிரஞ் சீவிகள் தங்கியிருக்கிறார்கள். இவர்கள் இறைவனை வழிபடும் பக்தர்களை ஆசீர்வதிக்கும் வகையில் பக்தர்களைப் பின் தொடர்ந்து வருகிறார்கள்.

அச்சிரஞ்சீவிகளின் ஆசீர்வாதத்தை ஏற்று அவர்களை வணங்கி "நாங்கள் சென்று வருகிறோம்; நீங்கள் இங்கேயே இருங்கள்" என்று கூறி விடைபெற்று வரும் வகையிலேயே பக்தர்கள் ஆலயச் சுற்றுப் பிரகாரத்தில் சற்று நேரம் அமர்ந்து வரவேண்டும் என்று பெரியவர்கள் சொல்லுகிறார்கள்.

ஆர். அருண் குமார்,

மேற்குமாம்பலம்.

கேள்வி : கோடிக்கணக்கான பொருளைச் செலவழித்து ஏழுபிரகாரங்கள், ஐந்து பிரகாரங்கள், ஆயிரங்கால் மண்டபங்கள், வானளாவும் கோபுரங்கள் ஆகியவற்றை அமைத்த பண்டைக்கால மன்னர்கள் கருவறையில் இறைவன் இறைவி திருவுருவங்களைக் கல்லினால் அமைத் திருப்பது ஏன்? திருவீதிஉலாவிற்கு எழுந்தருளும் உற்சவ மூர்த்தி, களைச் செம்பினாலும், தாமிரத்தாலும் அமைத் திருப்பது ஏன்?

பதில் : சோதிமயமான ஒளியின் ஆற்றல் கல்லில் அமைந்து விளங்கு கின்றது. ஒரு கல்லை மற்றொரு கல்லினால் தட்டினால் நெருப்பு உடனே வெளிப்படுவதைக் காணலாம்.

சிவவேள்வி வளர்த்து, அச்சிவ வேள்வியில் எழும் தெய்வீக ஒளி ஆற்றலை நிறைகுடமாகிய கும்பத்தில் சேமித்து, அக்கும்ப நீரால், நெருப்பு நிறைந்துள்ள கல் விக்கிரகத்தைத் திருக்குடநீராட்டி தெய்வீக ஆற்றலைப் பக்தர்களுக்கு வழங்கச் செய்வது எளிது என்பதாலேயே கருவறையில் தெய்வத் திருவுருவங்களைக் கல்லில் அமைத்துள்ளார்கள்.

திருவீதியில் எழுந்தருளிவரும் உற்சவ மூர்த்திகளைச் செம்பினால் அமைப்பதற்குக் காரணம் மின்ஆற்றலை விரைந்து பாய்ச்சும் ஆற்றல் செம்புக் கம்பிக்கே உண்டு. ஆகவே தெய்வீக சக்தியாம் மின்ஆற்றலை ஆன்மாக்களின் உய்வுகருதி, பாய்ச்சுகின்ற திருவீதிவலம் வரும் உற்சவ மூர்த்தியைச் செம்பினால் அமைத்துள்ளனர் நமது முன்னோர்கள்.

சு. பிரேமகுமாரி, சேலம்-6.

கேள்வி : "சித்திரகுப்தன்" என்பவர் யார்? இவருக்கு அப்பெயர் வரக் காரணம் என்ன? அவருடைய பணி என்ன? அவருக்கென நம் தமிழகத்தில் தனிக்கோயில் உள்ளதா? கூறவும்.

பதில் : மனிதர்கள் செய்யும் பாவ புண்ணியங்களைக் கணக்கெடுப்பதற்காக ஒருவரைப் படைக்க வேண்டும் என்று சிவபெருமான் எண்ணினார்.

இந்த எண்ணத்துடன் ஒருவரைச் சித்திரமாக வரைந்து, அச்சித்திரத்திற்குச் சிவபெருமான் உயிர் ஊட்டினார். இவ்வாறு தோன்றியவரே "சித்திர புத்திரன்" ஆவார். இப்பெயரே "சித்திர குப்தன்" எனப்பின் திரிபுற்று வழங்கி வருகின்றது.

யமதர்மன் முன்னால் பூதஉடலைத் துறந்துவரும் மானிட உயிர்களின் பாவ புண்ணியங்களைப் படிப்பது சித்திரகுப் தனின் பணி ஆகும்.

நவ கிரகங்களில் ஒன்றான கேது வுக்கு இந்தச் "சித்திர குப்தன்" அதி தேவதை ஆவார். கேது திசை, கேது புத்திகளில் துன்புறுவோர் சித்திர குப்தனை வழிபட்டு துன்ப நீக்கம் பெறலாம்.

தென்னகத்தில், கோயில்களின் திருநகரமாய்த் திகழும் காஞ்சிபுரத்தில் "நெல்லுக்கார வீதி"யில் சித்திர குப்தனுக்கென்று தனி ஆலயம் உள்ளது.

சித்திரா பௌர்ணமி நாளில் சித்திர குப்தனை வழிபடுவது மிகுந்த பலனைத் தரும்.

மு. இரமணி, இராஜபாளையம்

கேள்வி : புகழ்பெற்ற தமிழக சிவாலயம் ஒன்றில் நந்தி இல்லை, கொடி மரம் இல்லை, தட்சிணா மூர்த்தி சந்நிதியும் இல்லை என்று கூறப்படுகின்றது. அந்தச் சிவாலயம் எது?

பதில் : மாணிக்க வாசகரைச் சிவபெருமான் குருவாக எழுந்தருளி ஆட்கொண்ட "ஆவுடையார் கோயில்" என



வழங்கும் திருப்பெருந்துறை திருக் கோயில் தான் அது.

மு.கணேசன், ஜலகண்டாபுரம்.

கேள்வி : "பஞ்ச சமஸ்காரங்கள்" என்றால் என்ன?

பதில் : வைணவர்கள் மேற் கொள்ள வேண்டிய ஐந்து ஒழுக்கங்கள் "பஞ்ச சமஸ்காரங்கள்" எனப்படும்,

இவை :

1. சங்கு, சக்கரம் ஆகிய இவற்றின் அடையாளங்களை தோள்களில் அணிதல்
2. நெற்றியில் திருமண் காப்புண் அணிதல்
3. "தாசன்" எனும் பெயர் தரித்தல்
4. திருமாலின் திருமந்திரத்தை உச்சரித்தல்
5. திருமகள் நாதனை ஆராதித்தல்

இவ்வைந்தையும் ஒழுக்கங்களாகக் கொண்டவர்கள் வைணவர்கள். இப்"பஞ்ச சமஸ்காரங்களை" உடையவர்கள் ஆதல் பற்றியே "ஐயங்கார்" என்று வைணவர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஆ. சாந்தி, வேலூர்.

கேள்வி : அட்டாங்க வணக்கம், பஞ்சாங்க வணக்கம் என்றால் என்ன?

பதில் : தலை, இரண்டு செவிகள், இரண்டுகைகள், இரண்டு கால்கள், முகம் இவை தரையில் படும்படி வணங்குதல் அட்டாங்க வணக்கம் ஆகும். அட்டாங்க வணக்கம் ஆண்களுக்கு உரியது.

தலை, இரண்டு கைகள், இரண்டு முழங்கால் தரையில் படும்படி வணங்குதல் பஞ்சாங்க வணக்கம் ஆகும். பஞ்சாங்க வணக்கம் பெண்களுக்கு உரியது.

கு. பஞ்சாபகேசன், கும்மிடிப்பூண்டி.

கேள்வி : கும்பாபிஷேகத் தத்துவம் என்ன என்பதை சுருங்கக் கூறவும்.

பதில் : இறைவன் ஜோதி வடிவம் ஆனவர். அந்த ஜோதியை சிவாக்கினி யிலே விளையுமாறு செய்து, கும்பத் திலிருந்து பிம்பத்திற்குக் கொண்டு சேர்ப்பதுதான் கும்பாபிஷேகம்.

சிற்பக் கல்லிலே சிவாக்கினியிலே விளைக்கப்பட்ட அருள் ஜோதி கொண்டு போய் சேர்க்கப்படுகிறது.

கும்பாபிசேகத்திற்கு முன் கல், கும்பாபிசேகம் ஆன உடனே கடவுள். எதைப் போல என்றால் காகிதம் எங்கும் உள்ளது; அரசாங்கத்தார் அந்தக் காகிதத்தை ரூபாய் நோட்டாக அச்சிட்டு மாற்றித் தருகிறார்களே அதைப்போல,

வேத ஆகம மந்திரங்களாலே சிவவேள்வி செய்து அருள்ஜோதியை உருவாக்கிக் கல்லைக் கடவுளாக மாற்றுவதே கும்பாபிஷேகத் தத்துவம் என்று அருளாளர்கள் நமக்குத் தெளிவு படுத்துகிறார்கள்.

தலவிருட்சங்கள்

திருக்கோயில்களின் தலவிருட்சங்கள் வணங்கி வழிபடுதற்கு உரியன.

ஒற்றியூரில்	– மகிழமரம்
மயிலையில்	– புன்னை மரம்,
காஞ்சியில்	– மாமரம்,
கழுக்குன்றில்	– வாழை மரம்,
சிதம்பரத்தில்	– தில்லைமரம்,
திருவானைக்காவில்	– வெண்ணாவல் மரம்,
மதுரையில்	– கடம்பமரம்

இவை குறிப்பிடத் தக்க சில தலவிருட்சங்கள் ஆகும்.

முன் அட்டை:	மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர், திருக்கோயில் கோபுரமும் பொற்றாமரைக்குளமும்
பின் அட்டை :	அருள்மிகு வடிவுடையம்மன் திருவொற்றியூர்

தெய்வங்கள் மதித்த மொழி தமிழ் மொழி. கிளியின் பேச்சில் இயல் தமிழையும், குயிலின் குரலில் இசைத் தமிழையும், மயிலின் ஆட்டத்தில் நாடகத் தமிழையும் கண்டு உலகத்தையே முத்தமிழ் மயமாகக் கண்டனர் நம்மவர். பார்வதி தேவி மீனாட்சியாகவும் சிவபெருமான் சோமசுந்தரபாண்டியனாகவும் தோன்றி அரசாட்சி செய்த பேறு வேறு நாட்டிற்குக் கிடையாது.

சிவபெருமான் தென்னாட்டில் திருப்பேரூரிலும், திருவாலங்காட்டிலும், சிதம்பரத்திலும் நடனமாடியது தென்னாட்டுத் தென்றல் காற்றுத் தன்மீது பட்டு, ஆடியதனால் ஏற்பட்ட களைப்பு நீங்கவும் இனிய செந்தமிழைச் செவியேற்று மகிழவும் என்றார் பரஞ்சோதி. தமிழின் மீதுள்ள அன்பினால் அம்மொழியின் இனிமையை நுகர விரும்பியே மதுரை வந்தனர் என்கிறார் குமர குருபர சுவாமிகள்.

சிவபெருமான், அம்மை, முருகப் பெருமான் மூவருமே பிறப்பு இறப்பு இல்லாதவர்கள். அம்மை உலகத்தையே



மீனாட்சி திருக்கல்யாணம்

மீனாட்சி மைந்தன்

கருதரிய கடலாடை உலகுபல அண்டங்கருப்பமாய்ப் பெற்ற கன்னி எனக் கூறுவார் சிவப்பிரகாச சுவாமிகள். மகா லட்சுமி கடலில் தோன்றினாள். சீதாபிராட்டி பூமியிலிருந்து தோன்றினாள். ஆண்டாள் துளசி வனத்தில் கண் டெடுக்கப்பட்டாள். பராசக்தியின் அம்சமான எவரும் ஒருவர் வயிற்றிலிருந்து தோன்றவில்லை என்பது குறிப்பு.

விச்சுவாவசு என்ற கந்தர்வனின் மகள் விச்சாவதி என்பவள், சக்திதேவியின் மந்திரத்தை நிறைய செபம் செய்த காலத்தில், தன் கையில் ஒரு கிளியை வைத்துக் கொண்டு மூன்று வயதுக் குழந்தையாக அம்மையைப் பலவாறு போற்றி வழுத்திப்புகழ, அம்மை "உனக்கு என்ன வேண்டும்?" எனக்கேட்க, "உன் திருவடியை மறவாமை வேண்டும்?" என்ன, அம்மை "வேறு இன்னும் என்ன வேண்டும்?" என்று கேட்க "இதே மூன்று வயது குழந்தையாக என்னிடம் வந்து அருள வேண்டும் என்று வரங்கேட்டாள் விச்சாவதி.

அம்மை கொடுத்த வரத்தின்படி விச்சாவதி, காஞ்சனமாலை என்ற பெயருடன் பிறந்து மதுரையை ஆண்ட மலையத்துவசபாண்டியன் பட்டத்தரசி யானாள்.

மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன் மகவில்லையே என மனம் வருந்தி தொண்ணூற்றாறு அசுவமேதயாகம்

செய்தான். அந்த யாகம் தேவேந்திர பதவியை அளிக்குமே தவிர மக்கள் பேற்றையளிக்காது. தேவேந்திரன் பாண்டியன் எதிரில் தோன்றி மக்கட் பேறு பெற புத்திரகாமேட்டி எனும் யாகத்தை செய்யுமாறு கூறவும். பாண்டியன் அந்த மகவேள்வி செய்யத் தொடங்கினான், மதுரையில் யாகம் நடைபெற, கைலை யிலிருந்து சிவபெருமான் அம்மையைப் பிரிந்து தனியரானார். பர்வதராசன் மனைவியான மேனை தன்மகளான பார்வதி வேறு எங்கோ புறப்பட்டு விட்டாள் என எண்ணினாள். பதினெட்டு மொழிகள் பேசக் கூடிய பாரத நாட்டில் தமிழ் நாடு செய்த புண்ணியத்தால், தமிழ் மூவேந்தர்களில் பாண்டி மாதேவியின் மடிமீதுவந்து அமர்ந்தாள் அம்மை. உலக வழக்கத்திற்கு மாறாக, மூன்று மார்புகளுடன் அம்மை தோன்றினாள்.

படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய ஐந்து காரியங்களையும் செய்யக் கூடிய சக்தி தேவியை திருமகளாகப் பெறுவதற்குப் பாண்டியன் என்ன புண்ணியம் செய்தானோ! அத்தகைய அம்மை மகளாக வந்து மடிமீது அமர்வதால் காஞ்சனமாலை என்ன புண்ணியம் செய்தாளோ? என்றெல்லாம் நினையாத பாண்டியன் மக்கட் பேறில்லாத குறை நீங்க இந்த வேள்வி செய்தேன்! **அது ஒரு பெண் மகவையளித்துள்ளது!** அதுமட்டுமா? அழகிய இப்பெண் குழந்தை இயற்கைக்கு விரோதமாக மூன்று மார்புகளுடன் தோன்றியுள்ளதே எனக் கவலைப் பட்டான்.

இவ்வாறு பெண்ணாகப் பிறந்ததே எனக்கவலை கொண்ட பாண்டியன் கேட்க "அரசே! நின் மகளுக்கு ஆண்மகனுக்குக் கற்றுக் கொடுப்பது போல் யானை ஏற்றம், குதிரையேற்றம் முதலானவை கற்பித்துப் பெயர் "தடாதகை" எனச் சூட்டுவாயாக (தகுதியான காரியத்தை - தகைமை நிறைந்த காரியத்தைத் தடுக்காதவள்) இவளை மதுரைக்கு அரசியாக முடிசூட்டுவாய். இவளுக்குத் தக்க நாயகன் எதிரில் தோன்றும் போது அதிகமான உறுப்பு மறைந்து விடும். கவலைப்படாதே" என ஒரு அசரீரி கேட்டது. (மீன் தன் முட்டைகளை ஒருமுறை கண்ணால் பார்த்தால் குஞ்சுகள் வெளிவரும். அதனால் அம்மையை அழகிய மீன் போன்ற கண்களை உடையவள் **அங்கயற் கண்ணி- மீனாட்சி** என்பர்)

அசரீரி கேட்டு மகிழ்ந்த பாண்டியன் குழந்தையை அவ்வாறே வளர்த்து மதுரையின் அரசியாக முடிசூட்டி, தவஞ் செய்ய காடுசென்றான், கன்னிப் பெண்ணாக இருந்த மீனாட்சி அரசாட்சி செய்ததால் பாண்டிய நாட்டிற்குக் **கன்னி நாடு** எனப் பெயர் வந்தது.

தன் மகளுக்குத் தக்க பருவத்தில் திருமணம் நடைபெற வேண்டுமென்று கவலைப்பட்ட அன்னையிடம் தான் எல்லாதிக்குகளையும் வென்று வருவதாக அம்மைபுறப்பட்டு, ஏழுதிசைகளையும் வென்று கடைசியாக வடதிசை சென்றாள். நம் நாட்டின் வடக்கெல்லையான மலைகளின் அரசன் எனத் திகழும் இமயமலையை அடைந்தாள். மலையில் அருவி கொட்டியது. அது "என் அருமை மகளே! பார்வதியாக இருந்த நீ என்னை விட்டுவெகு நாட்கள் பிரிந்து, என் நினைவு வந்து இங்கு என்னை நோக்கி வருகிறாயா?" என ஆனந்தக் கண்ணீர் விட்ட மாதிரி இருந்தது" என்கிறார் பரஞ்சோதி

அருவியின் ஓசை அன்னையை "வா, வா" என அழைப்பது போன்றிருந்தது என்றார்.

சேனைகளுடன் அம்மை வருவது கண்டு சிவகணங்கள் தங்கள் தலைவனான நந்திதேவரிடம் கூற, அவர் சிவபெருமானின் உத்தரவு பெற்று, சிவகணங்களை அம்மையை எதிர்க்கும்படி செய்ய, அம்மை எதிரில் நிற்கமுடியாத படி சிவகணங்கள் சிதறியோடின. இதையறிந்த சிவபெருமான் தானே அம்மை எதிரிலே தோன்ற, **அம்மை தன் வலப்பாதியான இறைவனைக் கண்டாள்.**

அம்மை இறைவனைக் கண்ட எல்லையில் **ஒரு முலை மறைந்தது**.

நடுமார்பு மறைந்து இவர்தான் தனது நாயகன்' என அறிந்து நாணத்தால் தலைகுனிந்து நின்ற அம்மையை நோக்கிய இறைவன் "என்று நீ திக்கு விஜயம் எனப்புறப்பட்டாயோ அன்று முதல் உன்னைத் தொடர்ந்து வந்தோம். நீ மதுரை செல்க. திங்கட்கிழமையன்று மதுரையில்

வந்து திருமணம் புரிந்து கொள்வோம்" என்றார். சிவசக்திகள் என்றும் பிரியாது என்பது குறிப்பு.

மூவுலகமாதாவான மீனாட்சி மதுரை திரும்பினாள். மதுரை திருமணக் கோலம் கொண்டது. இறைவனது திருமணத்தைக் காணத் சுரிசங்கேந்திய திருநெடுமாலும்-வரன் முறை படைத்த நான்முகத் தொருவனும் - பீடுயர் தோற்றத்துக் கோடி உருத்திரரும் - ஆனாப்பெருந்திறல் வானோர்தலைவனும் - வாம்பரி இயக்கர் தாம் பன்னிருவரும் - சந்திரனொருவனும் செந்தீக்கடவுளும் - நிருதியும் எமனும் வருணனும் வாயுவும், எட்டுநாகமும்

முழங்க பிரமதேவன் மந்திரங்கள் கூற அம்மை திருக்கழுத்தில் மாங்கல்யம் பூட்டி திருக்கையைப் பிடித்து இறைவன் திருமணம் செய்து கொண்டார்.

அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல் முதலான சடங்குகள் முறைப்படி நிறைவேறின. சீதாராமர் திருமணம் செய்து வைத்த புரோகிதரான வசிட்டர்தன் மனைவியான அருந்ததியுடன் அமர்ந்திருந்தார். "எதிர் நின்ற கலங்கலில் கற்பின் அருந்ததி கண்டார்" என்பது கம்பன் வாக்கு. மதுரையில் மீனாட்சி யம்மையைத் திருமணம் செய்து கொண்டபோது புண்ணிய வசிட்டன் தேவி

அட்டவசுக்களும் - மூன்று கோடி ஆன்ற முனிவரும் - வசிட்டனும் கபிலனும் அகத்தியன் தானும் தும்புரு நாரதர் முதலிய அனைவரும் கூடினர்.

இறைவன் தமது நந்தி வாகனத்தில் மதுரைக்கு எழுந்தருளினார். மங்கலமகளிரோடு காஞ்சன மாலை எதிர் கொண்டழைத்தாள். மதுரை மக்கள் எல்லையில்லா மகிழ்ச்சியடைந்தனர். மணமேடையில அமர்ந்திருந்த இறைவனிடம் வந்த திருமால் அம்மையின் திருக்கரத்தை இறைவனது திருக்கரத்துச் சேர்த்து வைத்துத் தாரை வார்த்தார்.

அதன் பின்னர் நாலு வேத கோஷங்களுக் கிடையே பல வாத்தியங்கள்

எங்கெனச் செங்கை கூப்பி எதிர் வர அருட்கண்சாத்தி எனப் பேசுகிறார் திருவிளையாடல் புராணமுடையார்.

மற்ற தேசங்களில் அரசனைத் திருமணம் செய்து கொண்டவர் அரசியாவார். பாண்டிய தேசத்தில் அரசியான தன்னை மணந்து கொண்டவரை சோம சுந்தரபாண்டியர் என்ற திருநாமத்துடன் அரசனாக விளங்கச் செய்தாள் அம்மை மீனாட்சி என்கிறார் பரஞ்சோதி.

திருமணத்திற்காக சிதம்பரத்திலிருந்து வந்திருந்த புலிக்காலோன் (வியாக்ரபாதர்) பன்னக அரசு (பதஞ்சலி) இருவரும் நடராஜப் பெருமானின் தரிசனம்

செய்துதான் உணவுண்பது தங்களது நியமம் எனக் கூற அவர்களுக்காக மதுரையில் வெள்ளியம்பல மண்டபம் உண்டாக்கித் தானே நேராகச் சிவ பெருமான் நடனம் புரிந்தார்.

வியாக்ரபாதர் பதஞ்சலி முனிவர் இருவருடைய வேண்டுகோளுக்கு இணங்கி,அதே நடனத்திருக் கோலத்தில் உலகத்தவர் இன்றும் தரிசித்து உய்யும் நிலையில் சிவபெருமான் மதுரையில் காட்சி கொடுக்கிறார்.

அடிசார்ந்தவர்க்கு முடியாச் செல்வம் சிவ பெருமான். அம்முறையில் சிவபெருமானின் திருமணத்திற்கு வந்த அனைவரும் உணவுண்ட பின்னும் சமையல் செய்த உண்டிகள் குறைய வில்லை. தனது பரிவாரங்களில் ஒருவனான குண்டோ தரனைச் சிவபெருமான் அவ்வளவு சோற்றையும் உண்ணுமாறு ஏவினார். அவ்வளவையும் உண்டு குண்டோதரன் இட்டு உண்ணாதவர் வயிறுபோல் காந்துதே என வருந்துகின்றான். "ஐயம் இட்டுண்" என்றபடி நல்லோருக்கு உணவளிக்காதவன் வயிறு என்றுமே காந்தும் என்பது குறிப்பு.

சிவபெருமானின் ஏவலால் தனது சக்தி அம்சங்களில் ஒன்றான அன்ன பூரணியென்னும் தன் சக்தி மூலம் ஏழு குழிகளில் தயிர் சோறு வரவழைக்க அதை உண்டு குண்டோதரன் பசியடங்கினான்.

முதலில் குழம்புச்சோறு உண்கிறோம். அதில் ஏதாவது ஒரு காயைப்போட்டு அந்தக் காய்த்துண்டுக்குத் தான் பெயரிட்டுக் குழம்பை "முருங்கைக்காய்ச்சாம்பார்" "கத்திரிக்காய்ச் சாம்பார்" என அழைக்கிறோம். தானோடு கூடியது குழம்பு. 'தான்' என்ற அகந்தையுடன் கூடி மனிதன் குழம்புகிறான். அடுத்துத் தான் இல்லாதது ரசம் சோறு உண்கிறோம். ரசம் தெளிவானது. தான் என்பது நீங்கினால் தெளிவை அடைகிறான். நான் என்ற அகந்தையை நீங்கினால் தெளி வடைகிறான். இது மனிதனின் இரண்டாவது நிலை. 'தான்' என்பது நீங்கினால் இறைவனது நினைவு நமக்குக் கிடைக்கும். மூன்றாவதாக இனிய பாயசத்தை உண்கிறோம். இறைவனின் இனிமை பாயசம். அதை அறிந்தவுடன் குளிர்ந்த இறைவனின் அருள் கிடைக்கிறது என்பது தான் குளிர்ச்சியான மோர் அல்லது தயிர்ச்சோறு உண்பது. மனிதனுடைய உணவுண்ணும் செயலிலும் அழகிய தெய்வீகக் கருத்தைக் காட்டியருளினர் நம் முன்னோர்கள்.

அவ்வாறு உணவுண்ட குண்டோதரன் தாகம் கொண்டான். இறைவனிடம் வேண்டியிருந்தால் உடனே தாகம் தணிந்திருக்கலாம். தன்னால் முடியும் என்ற எண்ணத்தில் ஊரிலுள்ள எல்லா நீர்நிலைகளையும் வறண்டு போகுமாறு குடித்தும் தாகம் தணியவில்லை. அம்மையப்பர்களான மீனாட்சி சுந்தரேசுரர்கள் சோறு போட்டனர். தனது மற்றொரு தேவியான கங்கையை மதுரைக்கு வடபுறத்தில் நதியாகப் பெருகி வருமாறு இறைவன் கூறக் கங்கை பெருகி வந்தது. வேகமாக வந்தால் வேகவதி என பெயர் கொண்டு வந்து குண்டோதரன் தாகம் நீங்கத் தண்ணீர் அளித்தது. ஒரு அன்னை அன்னபூரணியாக வந்து சோறளித்தாள். மற்றொரு அன்னை தண்ணீரை அளித்தாள். குண்டோதரன் தாகம் தணிந்து இறைவன் எதிரில் பாடிக் கொண்டு நிற்கிறான் என்பது வரலாறு.

புராணத்திருமணங்களில் மிகவும் உயர்ந்தது மீனாட்சித் திருமணம். மணமகன்





தானே நாட்டியமாடி மக்களை மகிழச் செய்ததுடன் அனைவருக்கும் உணவளித்துத் தாகம் தீர்க்க ஒரு நதியையும் வர வழைத்தான் என்பர். வேகமாக வந்து குண்டோதரனின் தாகத்தைத் தீர்த்த நதியை வேகவதி என்றும் சிவகங்கை, சிவஞான தீர்த்தம் என்றும் அழைப்பர். வேகவதி என்பது மருவி வைகை என்று ஆயிற்று என்பர்.

வைகுண்டபதியான நாராயணன் கைலைநாதனான சிவபெருமானுக்குத் தனது சகோதரியான மீனாட்சியைத் திருமணம் செய்து கொடுத்ததால் இருவருடைய வாசத் தலங்களான வைகுண்டத்தின் முதலெழுத்தும், கைலையின் முதலெழுத்தும் சேர்ந்து வைகை எனப் பெயர் வந்தது என்பர்.

புண்ணியவான்களின் பக்தி நிலைக்கு ஏற்பட வைகுண்டபதவியையோ கைலைப் பதவி யையோ கொடுப்பதால் வைகை எனப் பெயர் வந்தது என்பர்.

திருவிளையாடற் புராணம் கேட்பவர் எல்லா நலன்களையும் அடைவர். அத்தகைய நலன்களையளிக்கும் மீனாட்சி சுந்தரேசுவரர்கள் நம் அணைவரையும் காக்க வேண்டுவோமாக!.

வேண்டப்படுகின்றன...
தங்கள் கருத்துக்களும்!
தரமான படைப்புகளும்!!

எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆற்வரோ கேளீர் என நாயன்மார்களால் போற்றி இறைஞ்சப்பட்டதும், சைவ சமயத்தின் தலைமைப் பீடமாகவும், பஞ்சபூதத்தலங்களுள் பூமிக்குரியதாகவும் பிறந்தாலும் பெயர் சொன்னாலும் முக்திதரக்கூடிய தலமாகவும் விளங்குவது திருவாரூர் ஆகும்.

அயனும் மாலும் காணமுடியாத அடிமுடியை ஆரூர்வீதியும், பரவைநாச்சியாரின் இல்லமும் காணும் வண்ணம் இறைவன் தனது திருப்பாதங்களால் நடந்து சென்ற பெருமையைக் கொண்டது திருவாரூர். தம்பிரான் தோழர் என அழைக்கப்படும் சுந்தரருக்காக எம்பெருமான் அவர் அவராகவே நடந்து சென்றதானால் திருவாரூர் "அடிமுடிதேடிய திருவீதி" எனவும், "பொன்பரப்பிய திருவீதி" எனவும் அழைக்கப்படுகின்றது.

ஆரூரா! தியாகேசா!

நள்ளிருள் யாமத்து நாவலர் பெருமான்
தள்ளாக்காதற் தணித்தர்க்கம்ம
பரவை வாய்தனில் பதமலர் சேர்ப்ப
ஒரு காலல்ல இருகால் நடந்தும்
எளியரின் எளியராயினர் போலும்
அன்பர் தமக்கே!

எனக் குமரகுருபரரும் பாடிச் சிறப்பித்துள்ளார். இந்தியக் கலாச்சாரத்தை உலகுக்கு எடுத்துக்காட்டும் சின்னங்கள் பல இருப்பினும் அவற்றுளெள்லாம் தலைமையாக விளங்குவதும், இறைவனின் சம்ஹரத்தை நினைவூட்டும் வகையிலும் அமைந்தது தேர் ஆகும். தேர் என்றவுடன் நினைவுக்கு வருவது திருவாரூர் ஆழித்தேர் தான்.

சைவ நாயன்மார்கள் அனைவரும் விரும்பி வந்து வணங்கிப் போற்றிய ஊர் திருவாரூர் ஆகும். கோயில், தீர்த்தம், வீதி, தேர், மதில் எனப்பாடல் பெற்ற பெருமைகளைக் கொண்டது திருவாரூர். சுமார் 1500 ஆண்டுகளுக்கு முன்பே திருவாரூர் திருக்கோயிலின் தேரோட்டம் மிகவும் பெருமைவாய்ந்ததாக விளங்கியுள்ளது.

அளவிலும், அழகிலும் அதற்கிணை வேறொன்றும் இல்லை. அண்டசராசரங் களையும் ஆக்கி, இயக்கி, காத்து வருபவனும், காலங்களுக்கெல்லாம் பழமையானவனுமாகிய பரம்பொருள், திருவாரூர் தேரினையே விரும்பிக் கொண்டான்.

வடமொழியில் மஹாரதம் என்றும் தமிழில் பெருந்தேர் என்றும் அழைக்கப்படும் இத்தேரினையும், இத்தேரில் பவனிவரும் பெருமானையும் அப்பர்பெருமான்

ஊழித்தீயன்னானை ஓங்கொலிமாப் பூண்டதோர்

ஆழித்தேர் வித்தகனை யான் கண்டதாரூரே!

என வியந்து பாடியுள்ளார். தொண்டர்தம் பெருமையை உலகுக்குச் சொன்ன சேக்கிழாரும் தேருரும் நெடுவீதித் திருவாரூர் என தேரினையும் அத்தேர்வரும் வீதியையும் பாடியுள்ளார்.

1500 ஆண்டுகளுக்கு முந்தைய பழமையைக் கொண்ட இத்திருத்தேர் 1945க்குப் பிறகு 1970 முதல் இவ்வாண்டு வரை (34 ஆண்டுகள்) சிறப்பாக நடத்தப்பட்டு வருகின்றது.

அப்பரும், சம்பந்தரும் முன்னின்று இன்றும் நடத்துவதாகக் கருதப்படும் இத்திருக்கோயில் ஆழித்தேரானது அலங்கரிக்கப்படும் முன்னர் 30 அடி உயரமும் அலங்கரிக்கப்பட்ட பின்னர் 99 அடி உயரமும் கொண்டு 25 டன் மூங்கில்கள் மற்றும் கட்டுமான மரங்களுடன் 17875 சதுர அடி தேர்சீலைகள் அலங்கரிக்க இந்த ஆண்டு ஆழித்தேர் சீலையானது ரூ.3 இலட்சத்து 37 ஆயிரம் செலவில் புதியதாக மதுரை கலையகத்தில் தயாரித்து வழங்கப்பட்டது. சுமார் 300 டன் எடையையும் கொண்ட ஆழித்தேரினை 3 புல்டோசர்கள், 7 டிராக்டர்கள், உடன் பல்லாயிரக்கணக்கான பகர்தர்கள் ஆரூரா! தியாகேசா! என விண்ணதிர



தேராரும் நெடுவீதி திருவாரூர் வாழ்வார்க்கு
ஆராத காதலின் நம் ஆரூரான் நாமமழைக்க
வாரா நின்றா(ன்) அவனை மகிழ்ந்தெதிர் கொள்வீர் என்று
நீராரும் சடைமுடிமேல் நிலவணிந்தார் அருள் செய்தார்

என சேக்கிழார் பெருமான் பாடியதைப் போல் ஆண்,பெண் என இருபாலரும் சாதி,சமய வேறுபாடுகளின்றி ஆழித்தேர் இழுக்கும் போது திருவாரூர் தேரழகு என்பதையும் திருவாரூர் தேர் திரும்புவது அழகு என்பதையும் காணும் கண்கள் என்ற பேறு பெற்றவவோ!

பக்தர்களின் ஆரூரா, தியாகேசா என்னும் முழக்கவொலியில் பெருங்கடல் பெயர்ந்து வருவது போல் பெருந்தேர் பவனி 2004-ஆம் ஆண்டிற்கான ஆழித்தேரோட்ட விழா 30.4.2004 வெள்ளிக்கிழமை காலை 6.20 மணி, பூரநட்சத்திரம் மேஷலக்கனத்தில் துவங்கி திருத்தேர் வரலாற்றில் முதன் முறையாக ஆழித்தேர் மாலை 6.00 மணிக்கு நிலையை வந்தடைந்தது.

வெளியீடு : திருமிகு ஜி. இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., ஆணையர்,
தமிழ்நாடு அரசு இந்து சமய அறநிலையஆட்சித்துறை, சென்னை - 600 034.
ஆசிரியர் : கவிஞர் டாக்டர். த. அமிர்தலிங்கம், எம்.ஏ., பி.எச்.டி.,
அச்சிடுவோர் : இராயப்பேட்டை எழுதுபொருள் அச்சு மற்றும் உபபொருள்கள் உற்பத்தியாளர் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட். சென்னை-14. தொலைபேசி எண் : 28485670

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ப்ருந்தாரண்ய க்ஷேத்ரம் ஸ்ரீமத் வரவரமுநயே நம:

இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை

அருள்மிகு பார்த்தசாரதி ஸ்வாமி திருக்கோயில்

திருவல்லிக்கேணி, சென்னை 600 005.

விமான ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன

மஹாஸம்ப்ரோக்ஷணப் பத்திரிகை

நாள் : 24.05.2004 திங்கட்கிழமை காலை 6.00 முதல் 7.00 மணிக்குள்

மஹா ஸம்ப்ரோக்ஷண நிகழ்ச்சி நிரல்

20.05.2004 வியாழக்கிழமை

4.00-5.30 P.M. அங்குரார்ப்பணம்

21.05.2004 வெள்ளிக்கிழமை

12.00-4.00 P.M. மூலவ மூர்த்திகளுக்கு அஷ்டபந்தனம் சமர்ப்பித்தல்

23.05.2004 ஞாயிற்றுக் கிழமை

3.00-6.00 P.M. மஹாசாந்தி ஹோமம், பூர்ணாஹூதி,
மஹாசாந்தி கும்ப திருமஞ்சனம், தீர்த்த வினியோகம்

9.00 P.M. சயனாதிவாஸம்

24.5.2004 திங்கட்கிழமை

2.30 A.M. விஸ்வரூபம், 8வது கால ஹோமம்,
கும்பம், பெருமாள் புறப்பாடு

6.00-6.30 A.M. **விமான ஸம்ப்ரோட்சணம்**

9.00-10.30 A.M. வேத,திவ்யபிரபந்த சாற்றுமறை, தீர்த்தம்,
பிரஸாதம் வினியோகம்

10.30 A.M. சேவார்த்திகள் தரிசனம்

4.30 P.M. ஸ்ரீராமர் திருவீதி புறப்பாடு

6.00 P.M. ஸ்ரீவேத வல்லித்தாயார் ஸ்ரீரங்கநாதர் உட்புறப்பாடு

8.00 P.M. ஸ்ரீபார்த்தசாரதிஸ்வாமி, ஸ்ரீ உடையவர்
ஸ்ரீ மணவாளமாமுனிகள் திருவீதி புறப்பாடு

....

உதவி ஆணையர் / செயல் அலுவலர்

விளம்பர உதவி : **கீதாச்சார்யன்**

பதிவு எண் : TN / PMG (CCR) / 707 / 03-05 / WPP No. 451 / 03-05



அருள்மிகு வடிவுடையம்மன்
திருவொற்றியூர்